சுதேசமித்திரன்

12-12-48

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

I-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

10 பெயர் பெற்ற I.T.L. தயாரிப்புகள்

1. காட்லிவர் ஆயிலுடன் கூடிய மால்ட் எக்ஸ்ட்ராக்ட்: வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்குமான போஷாக்களிக்கும் டானிக்.
2. கிரைப் ஸிரப்: குழந்தைகளின் ஜீரண சக்தி கோளாறுகளை நிவர்த்தி செய்யும் சிறந்த ஔஷதம்.
3. ஐடியால்: விஷமற்ற, கறைபடாத, நறு மணமுள்ள அரிக்காத சிறந்த கிருமி நாசினி.
4. ஜெகோராம்: லைம் & ஹைபோ பாஸ்பேட் சேர்ந்த காட்லிவர் ஆயில் எமெல்ஷன்.
5. ரெடிகுலின்: லிக்விட் எக்ஸ்ட்ராக்ட் ஆப் லிவர். ரத்தசோகைக்கு கைகண்ட ஔஷதம்.
6. லைடேடின்: எலிக்ஸிர் ஹைட் ராஸ்டிஸ் காம்பௌண்ட். ஸ்திரீகளுக்கான சிறந்த ஔஷதம்.
7. விடேபெரின்: போஷாக்களிக்கும் டானிக். அயம், A & D விடமின், மற்ற உலோகப் பொருள் சத்துக்கள், சேர்ந்தது.
8. க்ளுகோனேட்-D: கால்ஷியம் குறைவான எல்லா வியாதிகளுக்கும் குணமளிக்கவல்ல ருசியான மருந்து.
9. விடோமால்ட்: விடமின் சத்துக் குறைவுக்கு ஏற்ற மருந்து. விடமின் A, B, C & D யு-ன் மால்ட் எக்ஸ்ட்ராக்டும் சேர்ந்தது.
10. ஹைபர்-D காட்லிவர் ஆயில்: விடமின் A & D சேர்ந்த சுத்தமான காட்லிவர் ஆயில்.

பெங்களூர், மல்லேஸ்வரம், மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்டவை.

விற்பனை ஏஜன்டுகள்.

பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,
தபால் பெட்டி 63, சென்னை.

DJK 75 TM

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத் தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானல் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34 சாந்தோம், சென்னை 4.

ஆரூடம்!

உங்கள் எதிர்கால பலன்!!

★

தொழில், குடும்பம், காதல், பிரயாணம், வியாதி, வியாஜ்யம், வியாபாரம் முதலிய எல்லா விஷயங்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக பதில் அனுப்பப்படும். கட்டணத்திற்கான போஸ்டல் ஆர்டருடன் ஜாதகம் அல்லது கடிதம்எழுதும் நேரம்தேவை.

கேள்வி 3-க்கு ரூ. 2.
மேற் கேள்வி ஒவ்வொன்றுக்கும் அணா 8.
10 கேள்விகள்
அல்லது
ஒரு வருஷ பலன் ரூ. 5.
வெளி நாடுகளுக்கு 5 ஷில்லிங்.

மீனாக்ஷி ஜோதிடாலயம்,
P. B. நெ. 1015, பம்பாய்.

விநோத கதா மஞ்சரி விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க.....................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு...........................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

RAHAMATH PHARMACY
(Estd 1925)
55, Parish Venkatachala Iyer St, G. T., Madras.

சகல வியாதிகளுக்கும் கைமேல் பலன் தரும் யூனானி ஆயுர்வேத மருந்துகள் தயார் செய்யுமிடம்.
உத்தரவாதம் கொடுத்து ஆஸ்த்மா, ஈளை, சுவாச இருமல், சகல மேக வியாதிகள், குன்மம், சூதகவலி, சூதக கோளாறுகள், ரத்த மூலம், படை, சர்ம வியாதிகள் இவைகளுக்கு கைகண்ட யூனானி சிகிச்சை.
அநேக நற்சாட்சிகளை நேரில் பார்வையிடலாம்.
பரீக்ஷியுங்கள்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"
(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

1 பவுனில் 4 ஜதை
கவரிங் வளையல்கள்
கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை
சகாயமான விலைக்கு மொத்த மாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.
ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை
வெளிவந்து விட்டது!
வாசனை பாக்குத்தூள்
காலணாவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.
தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும்இருக்கலாம், 30மாத்ரை சீசா1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

சரும & தலை நோய்களை



உலகப் புகழ் பெற்ற ஜாம்-பெக் குணப்படுத்தும்

ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை மருந்து வஸ்துக்கள் சருமத்தினூடே புகுந்து வேலை செய்வதால் நமைச்சல், ரணம் போய், ரத்தக் கசிவு நின்று நோய் கிருமிகள் நாசமாகி பாதிக்கப்பட்ட சருமத்தை ஜாம்-பெக் சீக்கிரம் குணப்படுத்தி ஆரோக்கியமாகவிருக்கவும் செய்யும். மிருக கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்

எப்பொழுதும் உபயோகியுங்கள்

Zam-Buk

சருமநோய்கள் காயங்கள். பூச்சிகடிகள், புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

சமனமுட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி டி மதராஸ்

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் - பாதம் எண்ணெய் - அம்லா ஹேர் ஆயில் - வாசனை தேங்காய் எண்ணெய் - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் - ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபி குல்கந்து - பஞ்சாப்தேன் - முத்து பன்னீர் - ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் - இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி டி. மதருஸ்.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒருவருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35,

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. K. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

முத்து கழுத்து சங்கிலி



இமிடேஷன் ஜ்வல்கள் (வைரம்பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்தஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர், லாக்கெட்டுடன் முழு சைஸ் ரூ. 3-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரூ. 5-8. ஜுவல் இல்லாது பூவேலைகளுடன் டஜன் ரூ. 4-8. ஒருடஜன் எந்தவித மோதிரம் வாங்கினாலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனாம். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

போட்டோ படங்கள்:-பிரபல பாரிஸ் அழகிகளின் படங்கள். வயது 16 முதல் 20 வரை, ரகசிய விவரணை கூடாது. டஜன் விலை ரூ. 4/8, எல்லாத்தேச தலைவர்கள் காந்தி, நேதாஜி முதலியவர்களின் படங்கள் டஜன் ரூ. 3/8. தபால் கார்டு சைஸ், தபால்செலவு கிடையாது. 1 அணா ஸ்டாம்பு அனுப்பி, ஆயுள் பூராவும் உபயோகிக்கக்கூடிய காலண்டரை பெறலாம்.

HENA AGENCY.
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTTA.

தேவாம்ருதம் "பீம-வீர்" சாஸ்வத சக்தியை கொடுக்கும்

दवामृतम् 'भीम-वीर' शाश्वत शक्ति देनेवाला है

RESTORES MAN HOOD Nectar of Life MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

பரிசு - பரிசு - பரிசு

கிருஸ்துமஸ் பண்டிகை சமீபித்துவிட்டபடியால், மகாத்மா காந்திஜியின் ஞாபகார்த்தமாக கைத்தறிகளினுல் தயார் செய்த இட்டாலி சில்குகளில் சாரி, சோமன், அங்கவஸ்திரம் டிசம்பர் முதல் 30-12-48 வரை பரிசு வழங்கப்படும்.

பரிசு திட்டம்

35 ரூபாய் விலையுள்ள 3x8 சில்கு சோமன் ஒன்றும், அங்க வஸ்திரம் ஒன்றும் ரூபாய் 20-க்கும், 24 ரூபாய் விலையுள்ள 6 கெஜம் சில்கு சாரி ஒன்று ரூபாய் 12-க்கும் பரிசு வழங்கப்படும். நபருக்கு ஒன்றுக்குமேல் வினியோகம் செய்யப்படமாட்டாது. இத் திட்டத்தில் சேருபவர்கள் இதைக்கத்தரித்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

பெயர்.....................................

ஊர்.......................................

Sri Ram Silk Factory, Kottar (S. Travancore.)

சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் விவசாய இலாகா டிப்டி டைரெக்டர் (Retd) Sri M. A. பாலகிருஷ்ணன் L. Ag., M. A. S., சிவகங்காவிலிருந்து 21-10-48ல் எழுதுகிறார்:—

"தங்களுடைய ஆருடம் பலித்தது. மறுபடியும் தங்களை அணுகத் துணிந்தேன்." 3 கேள்விகளுக்கு ரூ. 1, மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

S.A.H. TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னுடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S. I. R.*



சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

கிருஸ்மஸ் பண்டிகை முன்னிட்டு

பிரத்யேக ஆபரணங்கள்

10 வருஷ உத்திரவாதம்.

உமா ஆபரணங்கள் ஸ்திரீகளுக்கும், புருஷர், குழந்தைகளுக்கும், அமூல்யமான உலோகத்தின்மேல் அசல் தங்க தகட்டினுல் சுற்றப் பெற்று தயார் செய்தவை.

600 டிசைன் கொண்ட கேட்லாக் இனும்.
ஆபரணங்கள் பார்சல் சார்ஜ்
0—15—0 அணு மாத்திரம்.

உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்,

உமா மஹால் - மசூலிபட்டணம்
உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்
போஸ்டாபீஸ்
TEL: 'UMA' MASULIPATAM.

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து, பார்வை குன்றி, கஷ்டப்படும் அன்பர்களே !

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத்தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம், சுவாசக் குழாய்களிலிருக்கும் பழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக்கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM.

189, வக்கீல் புது தெரு - P. B. No. 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58E, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர். 179, SEA ST., COLOMBO.

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தினதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்

" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

ஜெயா எலக்டிரிக் கம்பெனி,

சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

எலக்டிரிக் சாமான்கள்

ENGLISH MAKE

Switches Porcelain Base.	Dozen Rs.	19-8-0
Staircase Switches	,, ,,	36-0-0
Holders Bakelite	,,	8-8-0
Cealing Roses Bakelite	,,	8-12-0
Wallplugs & Pins Bakelite	,,	15-8-0
C.M.A. 1/18 V.I.R. COILS 100 yards		15-8-0
,, 14/36 Flexable wires	,,	30-0-0
15 to 30 walls India Bulbs	Dozen	18-8-0
15 amp. Ironclad Main Switches	each	11-0-0
9'' O. C. Braket & Holder	,,	2-8-0
Kantark 15 amp. Fuse units	,,	3-0-0
11 m-m pipes. 10 Feet	,,	3-8-0
2½ amp. A. C. Venner Meters	,,	50-0-0
Transformer lights GEC	,,	8-0-0
Langham Shades "Colour Border"	,,	2-8-0

மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும்.

M. R. PARTHASARATHY IYENGAR

Electrical Dealers

29A, T. P. KOIL STREET

TRIPLICANE :: MADRAS. 5

சகல விதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு கைராசியும் நம்பிக்கையுமுள்ள

புதிய ஜவுளிக்கடை



ராம்ராஜ்யா ஹால்

N.R. ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி... சேலம்

JOTHI Fabrics | பட்டு ஆடைகள் அணிந்த அனைவரும் நன்கறிவர் - எனெனில்,

நம் சொந்த கைத்தறியில் தயார்செய்த உயர்ரக பட்டு சேலைகள் 1-11-48 முதல் 30-11-48 வரை மித்திரன் வாரப்பதிப்பு வாசகர்களுக்கு 24 ரூபாய் மதிப்புள்ள 6 கெஜம் பட்டு சாரி 12 ரூபாய்க்கு தீபாவளி பரிசாக போஸ்டு & பாக்கிங் செலவு இல்லாமல் வழங்கினோம்.

தீபாவளி பரிசுக்காக ஸ்பெஷலாய் தயார் செய்யப்பட்டதில் வழங்கியது போக கைவசம் சொற்ப சேலைகளிருப்பதால் அவைகளையும் வழங்க நிச்சயித்துள்ளோம்.

இதில் கலந்துகொள்ள இதைக் கத்தரித்து விலாசமுடன் அனுப்பினால் 12 ரூபாய்க்கு ஒரு சாரி அனுப்பப்படும். நபருக்கு ஒரு சாரி விதம் வழங்கப்படும். M/O. அனுப்புவோர் M. O. ரசீதை கூபனுடன் அனுப்பவேண்டும்.

எம்மிடம் 5 முதல் 9 கெஜம் வரை புடவைகளும், சோமன், அங்கவஸ்திரங்களும் கிடைக்கும்.

பெயர்.................................

ஊர்........................ தேதி..........

கவர்மீது ஒட்டவும்:

JOTHI FABRICS,

KOTTAR — TRAVANCORE.

ரூ. 500 இனாம்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் நீர் விரும்பும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனாம்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினால் ரூ. 12.

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. 18.

தங்க மூடியுடன் ரூ. 15.
மூன்றுக்கு ரூ. 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

வயிற்று நோவுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக்கூடிய

R.P.S. முப்பு சூரணம்

ஆண், பெண் இருவரும். இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினால் தயாரிப்பு வயிற்றுப்புண், அஜீரணம், மலசிக்கல் வயிற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயிறு நோவுதல், குடல் கொந்தளிப்பு மேக சம்பந்தமான வியாதிகளையும் போக்கும். 4 அவு.பாட்டில் 1-க்கு விலை ரூ. 3. (த. செலவு தனி)

R. R. P. சாரதி. மகாத்மா காந்தி சித்த வைத்தியசாலை
தர்மராஜா கோவில் தெரு சிந்தாதிரிப்பேட்டை சென்னை

Quality always tells!
hence BUY
L.G
ASAFOETIDA



எல். ஜி
பெருங்காயமே
உயர்ந்தது

ఎల్.జి
ఇంగువ నుచూచి
తీయ్యండి

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள்: தாதா & கோ, நைனியப்ப நாய்க்கன் தெரு.



நரம்புத்தளர்ச்சியினால் மெலிந்து துரும்பாகி, முன்கோபத்துக்கும் சோர்வுக்கும் ஆளாகிறீரா?

வெள்ளம் வருவதற்கு முன்னே அணை போடுவது எவ்வளவு உத்தமமோ அதேபோல் முன் ஜாக்கிரதையுடன்

உங்கள் தேக ஆரோக்கியத்தை நவசக்தி மாத்திரைகள், தைலம் இவைகளால் விருத்திச் செய்துகொள்ளுங்கள்
உலகத்திலேயே மிகவும் சிறந்த டானிக் என்று டாக்டர்கள் புகழ்ந்திருக்கிறார்கள்.

வசக்தி ஔஷதங்களின் விலை:
மாத்திரைகள் ரூ. 5-0. தைலம் ரூ. 3-8.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

Phone P.C. 28
Gram "DASGO"

தாருல்-ஷாபா-கோலியான்
படாலா, கிழக்கு பாஞ்சாலம் (இந்தியா)
DARUL-SHAFA-GOLIAN (Regd.)
BATALA, E. PUNJAB, (INDIA)

ஸ்டாகிஸ்டுகள்:—

(1) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட், மதராஸ்.
(2) மெஸர்ஸ் மில்டன் & மில்லர், 1/157, பிராட்வே, மதராஸ்.
(3) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி.



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்களை பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட் ரூ.	2-0.	8.	ரோஜா செண்ட் ரூ.	1-8.
2.	கியோரா	,, 2-0.	9.	சரங்கி	,, 1-8.
3.	காஸ்	,, 2-0.	10.	லில்லி	,, 1-0.
4.	போகுல்	,, 1-8.	11.	லோடஸ்	,, 1-0.
5.	ஜாஸ்மின்	,, 1-8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கதம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனா	,, 1-8.	14.	கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.) 4, Hospital St., **Calcutta 13.**

ச்யாமா சாஸ்திரி க்ருதிகள்

ச்யாமா சாஸ்திரியின் க்ருதிகளையும், அவர்களுடைய பரம்பரையினர்களின் க்ருதிகளையும், அவருடைய கொள்ளுப் பேரனிடமிருந்து வாய்ப்பாட்டாக கற்றுக் கொண்டு, வீணையில் வாசித்த ஸ்ரீமதி எஸ். வித்யா. பி. ஏ. எல். டி. ஸரிகம நொடேஷனில் ஸ்வரப்படுத்தி எழுதிய மூன்று வால்யூம்கள் வெளிவந்திருக்கின்றன. மொத்தம் 244-பக்கங்கள் 9"x11" ச்யாமா சாஸ்திரிகள் இயற்றிய க்ருதிகள் 42 சுப்பராய சாஸ்திரி இயற்றியவை 11. அண்ணாசாமி சாஸ்திரி இயற்றியவை 8. மூன்று வால்யூங்களின் மொத்த விலை ரூ. 12/. பெதர்வெய்ட் பதிப்பு ரூ. 13-8.

தமிழ், தெலுங்கு, சம்ஸ்க்ருதம் இவைகளில் சாஹித்யமும், சம்ஸ்க்ருதம் தமிழில் ஸரிகம ஸ்வரங்களுடன் வீணை கமகங்களும், குறிப்பிட்டிருக்கின்றன. ராக பாவத்தை வெளியிடும் கமகக் குறிகளின் விவரம் முதல் வால்யூமில் ஆங்கிலத்திலும் மூன்றாவது வால்யூமில் தமிழிலும் எழுதப் பட்டிருக்கிறது. தீக்ஷிதரைப் பற்றிய சங்கீத சாம்ப்ரதாய ப்ரதர்சனைக்குச் சமமானது. மதராஸ் யூனிவெர்ஸிடி ஸங்கீத போர்டாரால் அங்கீகரிக்கப்பட்டது.

கிடைக்கும் இடம்: 46, எட்வர்ட் எலியட் ரோட், மைலாப்பூர். மதராஸ் 4.

ரிஜிஸ்திரேஷன் தபால் செலவு தனி.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ கார்த்திகைமீ 27உ ★ 1948-௵ டிசம்பர்மீ 12வ No. 46

ஜவுளிக் கண்ட்ரோல்

ஜவுளி உற்பத்தி கண்ட்ரோல் மீண்டும் இம்மாத முதல் இந்தியா முழுவதும் அமுலுக்கு வந்துவிட்டது. வினியோகத் துறையில் ஏற்கெனவே அமுலுக்கு வந்துள்ளது கண்ட்ரோலுக்குப் பின் துணித்திண்டாட்டம் சிறிதளவு தணிந்திருப்பதாகக் கூறலாம். கள்ள மார்க்கெட்காரர் முன்போல் களிப்புற இடமில்லை. ஜவுளி வரவு வர வர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. திப்திகரமான இம் மாறுதலுக்கு முக்கிய காரணம் சென்ற சில மாதங்களாக மில் உற்பத்தி அதிகரித்து வருவதும் மற்றொன்று ஏற்றுமதி குறைந்திருப்பதுமே. இதுவரை இம்மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டு வந்த ஜவுளி அளவு இம்மாத முதல் இரட்டிக்கப்பட்டிருக்கிறது. இம்மாகாணக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் துணி பெருவாரியாகத் தேங்கியிருக்கிறதாம்.

இதைக்கொண்டு துணி நெருக்கடி தீர்ந்துவிட்டதாக யாரும் முடிவு கட்டிவிடுவதற்கில்லை. கூட்டுறவுப்பண்டகசாலைகளில் சரக்குகள் அதிகமாகத் தேங்கிக் கிடக்கிறதென்றால், அவை பெரும்பாலும் ஜனங்களுக்கு வேண்டிய ரகங்களல்ல: அதோடு துணியின் தற்போதைய கண்ட்ரோல் விலையும் பெரும்பாலான ஏழை மக்களின் சக்திக்குட்பட்டதல்ல. அவர்களுடைய தேவை முறைப்படி பூர்த்தியாக துணி விலை இன்னும் வெகுவாகக் குறைந்தாகவேண்டும். அவர்களுக்கு வேண்டிய ரகங்களையும் இன்னும் பெருவாரியாக சப்ளை செய்வதற்கான நடவடிக்கைகள் அவசியம். உண்மையில் இதுவே கண்ட்ரோலின் முக்கிய நோக்கம்.

மில்கள் கூடியவரை அதிகமான லாபம் கிடைக்கக்கூடிய ரகங்களிலேயே இதுவரை முக்கியமாக முனைந்து வந்திருக்கின்றன. ஆனால் இனி மொத்த உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு,துணி ரகங்களை கட்டுப்பாடு செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறே நூல் உற்பத்தி விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட தரத்துக்கு மேற்படாத ரகங்களையே தயாரிக்க வேண்டுமென்று தற்போது விதிக்கப்பட்டிருக்கிறது. மில்களிடம் உள்ளசாதனங்களை பலவிதமான ரகங்கள் தயாரிப்பதில் சிதறவிடாமல் கூடியவரை ஒருமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தியை விசேஷமாக அதிகரிக்கக்கூடும். ஏற்கெனவே இத்துறையில் நடந்த ஒரு அரை குறைப் பரீட்சை விபரீதமாக முடிந்தது. குறிப்பாக வடக்கேயுள்ள சில மில்கள் அப்போது "ஸ்டாண்டர்ட்" துணி என்ற அருவருக்கத்தக்க ரகமொன்றை ஜனங்கள் தலையில் கட்டக் கூசவில்லை. இனி சர்க்கார் இத்தகைய பித்தலாட்டத்துக்கு இடந்தரப்போவதில்லை. புதிய உற்பத்தித் திட்டப்படி தயாரிக்கப்படும் துணிகள் கூடியவரை நீடித்து உழைக்கக்கூடியவையாக, அதாவது உண்மையில் விலைக்குத் தக்க பெறுமானமுள்ளவையாக இருக்கும்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

விலையைப்பொறுத்தவரை, தற்போதைய கண்ட்ரோல் கிரயம், அதற்கு முன்னிருந்த விலையைவிட ஓரளவு குறைவுதானாயினும், இதுவும் மக்களின் சக்திக்கு மீறியதாகும். மில்வாயில் விலையை உடனடியாகக் குறைப்பது சாத்தியமில்லாமலிருக்கலாம். ஆனால் அதற்கும்,

கடை விலைக்கும் உள்ள வித்யாசத்தைக்கூடிய வரை குறைக்கவாவது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியம். தற்போதைய திட்டத்தின்படி கடை விலை மில் விலையைவிட 20 சத விகிதம் வரை அதிகமாயிருக்கலாம். மில்லுக்கும், கடைக்கும்இடையே இவ்வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கையைக் கூடிய வரை குறைப்பதன்மூலம் மேற்குறித்த விலை வித்தியாசத்தை ஓரளவேனும் குறைக்கக்கூடும். துரிதமான துணி வினியோகத்துக்கு இடைஞ்சலில்லாத முறையில், இவ்வழியில் விலையைக் குறைப்பது எந்த அளவு சாத்தியமென்பதை சென்னை அதிகாரிகள் ஆராய வேண்டும்.

இம்மாகாணத்திற்கு மில் ஜவுளி அதிகமாக வரவிருப்பது மகிழ்ச்சியூட்டக்கூடியதாயினும், இதன்பலனாக கைத்தறி நெசவாளர்களின் நிலை என்னாகுமென்பதை அலட்சியம் செய்வதற்கில்லை. ஜவுளியைப்போல் இம்மாகாணத்துக்கு நூல் கோட்டாவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைக்கொண்டு கைத்தறி நெசவாளர் தயாரிக்கக்கூடிய துணிக்கு மார்க்கட் எங்கிருக்கிறது? மில் துணி அதிகமாக வரும் நிலையில், கைத்தறித் துணிக்கு தற்போது இங்கு உள்ள கிராக்கி மேலும் சுருங்குவது இயற்கை. ஏற்கெனவே இந்தத் துணியின் தேக்கம் அதிகம்.

கைத்தறி ஜவுளிக்கு முன்னிருந்த வெளி மார்க்கெட்டுகள் இப்போதில்லை. இங்நிலையில் நெசவாளர்கள் வழக்கமான ரகங்களையே மேன்மேலும் உற்பத்தி செய்துகொண்டிருப்பது உசிதமா என்று யோசிக்கவேண்டும். அவர்கள் அனைவரும் திடீரென்று புது வகையான ரகங்களை உற்பத்தி செய்ய முற்படுவது சாத்தியமன்று. எனினும் அவர்களில் பெரும்பகுதியினர் தற்போதைய நிலைமையில் இங்குள்ள மக்கள் வாங்கக்கூடிய ரகங்கள் கூடியவரை மலிவாக உற்பத்தி செய்வதில் கவனம் திருப்பலாம். எனினும் இதற்கான முயற்சிகள் உருப்பெறும்வரை கைத்தறி ஜவுளியில் பெரும் பகுதி வெளியிடங்களில் விற்பனையாக நாம் வழி செய்தாகவேண்டும். பாகிஸ்தான் முக்கியமாக இந்தியத் துணி சப்ளையையே நம்பியிருக்கிறது. அதற்கு மாதமொன்றுக்கு சுமார் 37,000 பேல் இந்திய சர்க்கார் அனுப்பி வருகின்றனர். இதில் ஒரு பாகமாக நமது கைத்தறித் துணியை பாகிஸ்தான் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நமது அதிகாரிகள் ஏன் வற்புறுத்தக்கூடாது? நம் மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஜீவாதாரமாயிருந்துவரும் இத்தொழிலை காப்பதன் அவசியத்தையும், அவசரத்தையும் சென்னை சர்க்கார் உணர்வது முக்கியம்.



★

மத்திய சர்க்கார் விளம்பர மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ திவாகரைச் சென்ற வாரம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டில்லியில் சந்தித்து சம்பாஷித்தார்.

★



டச்சு சிற்பி மிஸஸ் க்ளாராக்வின் இப்போது இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி ஸர்தார் வல்லபாய் படேலின் முகச் சிலையைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார். அவ்வேலை சிறக்க நிறைவேறும்பொருட்டு ஸர்தார் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து சிற்பிக்கு உதவுகிறார்.

சென்னை அரண்மனைக்காரன் தெருவிலுள்ள கச்சாலேச்வரர் ஆலயத்தில் சமீபத்தில் ஸ்கந்தஷஷ்டி லக்ஷார்ச்சனை நடந்தது. சூர சம்ஹாரதினத்தன்று படத்திலுள்ள மேற்படி சேவல் கோயிலுக்குள்சென்று பிராகாரத்தைச் சுற்றிவிட்டு, ஸ்ரீ முருகனை வழிபடுகிறது. அது முதல் தினசரி காலை, மாலைவேளையில் இச்சேவல் இங்ஙனம் வழிபட்டு வருகிறது. ஏராளமான ஜனங்கள் இந்த ஆச்சர்யத்தைப்பார்த்து வருகின்றனர்.



மாதர் மகா சபை

'குங்குமம்'

'என்ன, வந்தவள் அங்கேயே பிரமித்து நின்றுவிட்டாய்? வரலாம், வா' என்ருள் ருக்குவின் மாமியார், அங்கு வந்த சரோஜாவைப் பார்த்து.

'ஏன்? எங்களைப்பார்த்தால் அவ்வளவு பயமாயிருக்கிறதா என்ன?' என்ருர்கள் 'அங்கே கூடத்தில் வழக்கத்துக்குமேல் அதிகப்படியாக வந்திருந்தவர்கள்.

'பயம் ஒன்றுமில்லை. ஏதோ உபந்நியாஸம், கேட்கக்கூடியிருக்கிறவர்கள் உட்கார்ந்திருக்கிறமாதிரி இருந்தது. ஏதாவது அப்படி நடக்கிறதோ என்னவோவென்று பார்த்தேன், வேறென்றுமில்லை' என்ருள் சரோஜா.

'எல்லாரும் புராணம் கேட்கத்தான் வந்திருக்கிருர்கள்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'என்ன புராணம்?'

'காதல்' புராணம்!

'காதல் புராணமா? பௌராணிகர் யாரோ?'

'புராண ரத்னம், யக்ஷிணி கடாக்ஷம், சதுரபாஷிணி, உல்லாஸ விநோதினி ஸ்ரீமதி சரோஜினி அவர்கள்!' என்ருள் பானு.

'என்ன, ஒன்றும் புரியவில்லையா? நேற்று வாசிப்பதாகச் சொல்லிவிட்டு வாசிக்காமலேயே போய்விட்டாயே, அதை சிரவணம் (கேட்க) செய்யத்தான் வந்திருக்கிருர்கள்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'மஞ்சுளாவுக்கு அதன் அகமுடையான் எழுதினதாகச் சொன்னேனே அதுவா?' என்ருள் சரோஜா.

'அதுவேதான்.'

'போங்கள் மாமி,' என்று கொஞ்சம் வெறுப்புத் தட்டினமாதிரி சொன்னுள் சரோஜா.

'எதற்காக அதை இவ்வளவு பகிரங்கப்படுத்த வேண்டும் என்ருயா?'

'இதெல்லாம் ஏதோ குடும்ப விவகாரம். நமக்குள்ளாகவே தெரிவிப்பதா, வேண்டாமா என்று வெகுநேரம் யோசனை செய்தேன். என்னமோ கடிதத்தின்போக்கு சுவாரஸ்யமாக இருக்கிறதேயென்று உங்களுக்கெல்லாம் படித்துக் காட்டலாமென்று பார்த்தேன். இத்தனைக்கும் இந்தக்கடிதத்தை மஞ்சுளாவுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். நமக்குள்ளாக இருந்தாலும் ரகசியமாக இருக்கும். எல்லோருக்கும் தெரிந்து, பகிரங்கமாகிவிட்டால், அது ஏதாவது நினைத்துக்கொள்ளும். ஆனுல் கடிதத்தில் தவறுதலான விஷயம் ஒன்றுமில்லை. எல்லா குடும்பத்திலும் உள்ளதுதான். இருந்தாலும் நமக்கேன் அந்த வீண் வம்பெல்லாம்? எனபதுதான்.

'ஒன்றும் பகிரங்கமாகிவிடாது. அப்புறம் படி கேட்கலாம்.'

'சேஷிப்பாட்டி ரகசியம் தான்.'

'இருக்கட்டும். பகிரங்கமாகிவிட்டாலும் பரவாயில்லை. ஏதாவது தவறுதலான ஆட்சேபகரமான விஷயமாக இருந்தால் தானே யோசனை செய்யவேண்டும்? படி, நேரமாகிறது.'

'உங்களுக்குத் தெரியாது மாமி. நாம் இதில் என்ன பிரமாதம் என்று வாய்க்குச் சுளுவாகச் சொல்லிவிடுகிருேம். மஞ்சுளாவும் அப்படி நினைத்துவிட்டால் பரவாயில்லை. அதன் அகமுடையான் மகா சங்கோஜி. இந்த விஷயம் அவன் காதுக்கு எட்டி, அனுவசியமான தகராறு ஏற்படப்போகிறதே என்ற பயம்தான். சரி, எல்லோரும் இவ்வளவு ஆவலாக இருக்கும் போது நான் ஏன் அதைக்

கெடுக்கவேண்டும்? வந்தது வரட்டும் படித்துவிடுகிறேன் கேளுங்கள்' என்று சரோஜா, மஞ்சுளாவின் அகமுடையான் மஞ்சுளாவுக்கு எழுதிய கடிதத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தாள். அந்தக் கடிதத்தைப் படித்து முடிகிற வரையில் நடுவில் யாரும் பேசக் கூடாது என்ற நிபந்தனையைப் போட்டுவிட்டுப் பின்வருமாறு படிக்க ஆரம்பித்தாள்:—

....

.........48.

பிரிய மஞ்சுளாவுக்கு!

உலகம் என்பது என்வரையில்தான் இப்படி இருக்கிறதா, எல்லோருக்குமே இப்படித்தானா என்பது புரியவில்லை. எதனால் எனக்கு இந்தமாதிரியான ஒரு சந்தேகம் திடீரென்று ஏற்பட்டுவிட்டதென்றால் உன்னை விட்டுப் பிரிந்து ஒரு வாரம்தான் ஆகிறது. இந்த ஒரு வாரகாலத்தையும் நான்போக்கினது கடவுளுக்குத்தான் தெரியும். சந்திரனில்லாத வானம் மாதிரி இருக்கிறது இந்த வீடு. ஜீவகளையே போய்விட்டது என்றால் அது மிகையாகாது. இந்த ஒருவார காலமும் நான் கண்ணை மூடவேயில்லை. தூக்கம் வந்தால்தானே! என்னுடைய சிநேகிதர்கள் சிலர் வருஷக்கணக்காக தனி ரூம்கள் வைத்துக்கொண்டு ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் மாத்திரம் இல்லையா? நான் மாத்திரம் இப்படித் திண்டாடுவானேன்? அந்த ரகசியம்தான் எனக்கு விளங்கவில்லை.

மஞ்சு! நான் மிகைப்படுத்திச் சொல்வதாக நினைத்துவிடாதே. உண்மையாகச் சொல்கிறேன். ஒரு வருஷத்துக்கு முன்னால் நீ யாரோ, நான் யாரோ! அப்பொழுது அம்மாதான் சாதம் போடுவாள். அமிர்தம் மாதிரி இருக்கும். இப்பொழுதும் அதே அம்மாதான் போடுகிறாள். விஷம்மாதிரி இருக்கிறது. இருபத்தைந்து வருஷ காலம் பரிந்து பரிந்து போட்ட அந்தக் கை விஷமாக மாறி, முன்பின் தெரியாத, திடீரென்று தோன்றிய ஒரு கைக்கு இப்படிப்பட்ட ஒரு சக்தி ஏற்பட்டதற்கு என்ன தான் காரணம் இருக்குமென்று எவ்வளவு ஆராய்ச்சி செய்து பார்த்தாலும் தெரியவேயில்லை. மாயசக்தி, மந்திரா சக்தி என்று சொல்கிறார்களே, ஒரு வேளை அந்த ரகத்தைச் சேர்ந்ததோ என்னவோ? வாஸ்தவமாக மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொல்கிறேன். இந்த ஒரு வாரமும் சாப்பிட்டேனே தவிர, சாப்பிட்ட மாதிரியே இல்லை. அம்மாவின் மீது கொஞ்சங்கூடப் பிழையில்லை. அவள் முன்னைவிட நூறு பங்கு அதிகமாகத்தான் பரிந்து போடுகிறாள். ஆனால் பயன்?

இதென்ன பைத்தியம், கியித்தியம் பிடித்துவிட்டதா என்ன என்று நீ நினைக்கலாம். ஒளிக்காமல் சொல்கிறேன். மாடுகள் வெளியே சென்று மேய்ந்துவிட்டு, 'தொட்டியை' (தீனி) நினைத்துக்கொண்டு, மாலையில் அவசர அவசரமாய் வீட்டிற்கு ஓடி வருமே, அந்த மாதிரி நீ இங்கே இருக்கும்பொழுது ஆபீஸ் விட்டதும் அப்படி, இப்படி திரும்பாமல் நேராக வீட்டிற்கு வந்துகொண்டிருந்தவனுக்கு எதற்காக இந்த வீட்டிற்கு வரவேண்டும் என்றுதான் இப்பொழுது தோன்றுகிறது. இல்லாமலென்ன! நீ இல்லாத வரையில் இந்த வீட்டில் என்ன இருக்கிறது? வெறிச்சென்றல்லவோ போய்விட்டது!

ஆனால் மஞ்சு! ஒரு விஷயத்தை மாத்திரம் இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன். இனி



"............ராமாயணம் கேட்பதுபோல்............"

நீ இங்கு வந்தால் ஒரு பெரிய மாறுதலைக் காணப் போகிறாய். அதாவது, இனி ஒருவரைத் திருப்திசெய்வதற்காக வீணிற்காவது வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்ளமாட்டேன். ஒருவரும் இல்லாத சமயமாகப் பார்த்து அடுப்பங்கரையில் வந்து ரகசியம் பேசமாட்டேன். 'மஞ்சு!' என்று கூடத்திலிருந்து வாய்விட்டுக் கூப்பிடுவேன். மனம் விட்டு எல்லோரெதிரிலும் பகிரங்கமாகப் பேசுவேன். சினிமாவுக்கும், பீச்சுக்கும், சங்கீதக் கச்சேரிகளுக்கும் அழைத்துக் கொண்டு போவேன். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ரகசியமாக ஜாக்கெட் துணியும், அலங்காரச் சாமான்களும் வாங்கிக் கொடுக்கமாட்டேன். நேராகக் கடைக்கு அழைத்துக் கொண்டுபோவேன். உனக்கிஷ்டமானவற்றை நீயே தேர்ந்தெடுத்துக்கொள்ளச் செய்வேன். ரிக்ஷாவில் போகும்போது தானாகட்டும், உனக்கு ஒரு ரிக்ஷா, எனக்கு ஒரு ரிக்ஷா என்று தனித்தனி ரிக்ஷா பேசமாட்டேன். ஒரே ரிக்ஷாவில் உன்னை அழைத்துக்கொண்டு செல்வேன். தெருவில் போகும்போது மாத்திரம் என்ன, உன்னுடன் 'சௌல்' அடித்துக் கொண்டு போகமாட்டேனா? இல்லாமலென்ன, இந்த யௌவனத்தின் லக்ஷணம்தான் வேறென்ன சொல்லேன் பார்க்கலாம்!

மஞ்சு! என்னுடைய இன்னொரு முட்டாள்தனத்தையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இந்தக் காலத்துப் பசங்கள், கொஞ்சம்கூட சங்கோஜமில்லாமல் என்ன இப்படி 'மிருகம்' மாதிரி பழகுகிறதுகளே என்று நான் இதுகளுடைய அசட்டுத்தனத்தைப் பற்றி அடிக்கடி கேவலமாக நினைப்பதுண்டு. ஆனால் இப்பொழுதல்லவோ தெரிகிறது நான் நினைத்தது எவ்வளவு முட்டாள்தனம் என்பது! நாளுக்கு நாள் வயசு அதிகமாகிக் கொண்டுதானே போகிறது! திரும்பவும் வேண்டுமென்றால் இந்த யௌவனம் வரப்போகிறதா?

ஆகையால் நீகூட இல்லாமல் என்னால் இனி ஒரு க்ஷணம்கூட இருக்கமுடியாது. உன்னுடைய பிரிவு இவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என்று சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை. அதனால்தான் உன்னுடைய பெற்றோர்கள் 'ஒரு மாதம் கழித்து மஞ்சுளாவை அனுப்புகிறோம்' என்று சொன்னதற்கு 'சரி' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எவ்வளவு அசட்டுத்தனம் செய்துவிட்டேன் என்பது இப்பொழுதல்லவோ தெரிகிறது! நீ எப்படி நினைக்கிறாயோ? இந்தக் கடிதம் கண்டவுடனே, உன் பெற்றோர்களிடம் என்ன சொல்வாயோ, ஏது சொல்வாயோ, அடுத்த வண்டிக்கே புறப்பட்டு இங்கு வந்து சேருவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டியது. நாளையதினம் உன் வருகையை எதிர்பார்க்கிறேன். நாளைய தினம் வந்து சேராவிட்டால் ரொம்பவும் விபரீதத்தில்தான் போய் முடியும்.

இப்படிக்கு,

உன் பிரியமுள்ள.

கோபாலன்

என்று சரோஜா கடிதத்தைப் படித்து முடித்தாள். அதுவரையில் அங்கு உட்கார்ந்திருந்தவர்கள் கடிதத்தினுடைய சுவாரஸ்யத்தில் வாயைத் திறக்கவில்லை. பிறகு பானு அந்தப்பிள்ளை எழுதின கடிதமா இது?' என்று சொல்லும்போது கடிகாரத்தில் மணி 'டங் டங்' என்று ஐந்து அடித்தது.

'மணி ஐந்தா அடித்து விட்டது. இதுபற்றிய மீதி சர்ச்சையை நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்' ஐந்து மணிக்கெல்லாம் ஒரு சிநேகிதி என்னைப்பார்க்க வருவதாகச்சொல்லியிருந்தாள். நான்வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் சரோஜா.

அவர் பாஷையில்!

"ஏன்னா! என்ன ஒரு நாழியா உச்ச ஸ்தாயிலேயே பேசிண்டிருக்கேள். ஒண்ணரை கட்டைலே பேசினா போறாதோ. அவர் என்ன செவிடா...?"



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

4
சோகத்தில் வந்த மோகம்

★

கண்ணன் இரு சேனைகளுக்கும் நடுவே தேரை நிறுத்திய பொழுது அர்ஜுனன் தன்னை எதிர்க்கக்கூடியிருந்த உறவினர், நண்பர், ஆசாரியர் முதலியோரைப் பார்க்க அவன் மனதில் சோகம் பிறந்தது. அதனால் வேதனை மிகுந்தவனாகக் கண்ணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்:—

போர் புரிய வந்திருக்கும் இந்தச் சுற்றத்தாரைப் பார்த்து எனது அவயவங்கள் சோர்வடைகின்றன. என் தேகம் நடுங்குகின்றது. மயிர்க் கூச்சலும் உண்டாகிறது. காண்டீவம் கையிலிருந்து நழுவுகின்றது. உடலின் மேல் தோல் தவிக்கின்றது. உட்காரவும் சக்தி அற்றிருக்கிறேன். என் மனம் கலங்குகின்றது. தீச்சகுனங்களையும் காண்கின்றேன் என்று சோகத்தால் பேசிய அர்ஜுனனுக்கு மனக் கலக்கம் உண்டாயிற்று. கலங்கிய மனம், ஏற்கனவே துணிந்து மேற்கொண்டிருந்த போரைக் கைவிடுவதற்கான போலிக் காரணங்களையும் காண ஆரம்பித்தது.

தன் தமரைக் கொன்று
சமரத்துத் தான்சேரு
நன்றி தனையொன்றும்
நான்காணேன்—கொன்ற
விசையமுநான் கண்ணனே
வேண்டேன் அரசும்
அசைவில் வருஞ்சுகமும்
ஆங்கு

கண்ணனே—கண்ணா! தன் தமரை—தனது உறவினரை, சமரத்துகொன்று—போரில் கொலை செய்து, தான் சேரும்—ஒருவன் அடையப்போகும், நன்றி தனை ஒன்றும்—நன்மை எதையும், நான் காணேன்—நான் காணவில்லை, கொன்ற விசையமும்—கொலை செய்து வந்த வெற்றியையும், நான் வேண்டேன்—நான் விரும்பவில்லை, அரசும் அசைவில் வரும் சுகமும் (வேண்டேன்)—அவ்வாறே ராச்சியத்தையும் நிலையாக வரும் இன்பத்தையும் விரும்பவில்லை.

நச ச்ரேயோநு பச்யாமி
ஹத்வா ஸ்வஜனம் ஆஹவே
நகாம்க்ஷே விஜயம் க்ருஷ்ண
நச ராஜ்யம் ஸுகாநிச

(இ-ள்) ஆஹவே—யுத்தத்தில், ஸ்வஜனம்— உறவினர்களை, ஹத்வா—கொன்று, அது—அதன் பிறகு, ச்ரேயச்ச-(அடையும்)மேன்மையை, நபச்யாமி நான் காணவில்லை, க்ருஷ்ண-கண்ணனே!, விஜயம்-வெற்றியை, நகாம்க்ஷே—(நான்) விரும்பவில்லை, ராஜ்யம் ச-அரசாட்சியையும் (விரும்பவில்லை).

சோக முதிர்ச்சியால் முன்னே கடமை என்று செய்யத் துணிந்த போரை அர்ஜுனன் கைவிட விரும்பினான். கைவிடுவதற்கான காரணங்களும் அவன் கலங்கிய உள்ளத்தில் தோன்றின. யாருக்காக ராச்சியத்தைப் பெற்று வாழவேண்டும் என்ற ஆசை உண்டாகுமோ அந்தக் குருக்கள் தந்தையர் புத்திரர் அங்ஙனமே பாட்டன்மார், அம்மான்கள்பேரர் மைத்துனர் உயிரையும் விடச் சித்தமாய் போரில் எதிரியாய் வந்தார்கள். அதனால் அவர்களைக் கொன்றுவரும் ஜயத்தால் ராச்சியத்தைப் பெற்றாலும் இம்மையில் பயன் கிட்டாது. யோகம் கைவரப்பெற்ற சந்நியாசியும் போரில் இறக்கும் வீரனுமே சூரிய மண்டலத்தைப் பிளந்துகொண்டு போய்ச் சுவர்க்கத்தை அடைகின்றான் என ச்ருதி ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. அதனால் போரில் பிறரைக் கொன்று தான் பிழைத்திருப்பவன் மறுமையில் யாதொரு பயனையும் பெறுவதில்லை. வெற்றி பெறுவதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த அர்ஜுனனுக்கு வெற்றி 'இன்மையிலும் மறுமையிலும் பயன் அளியாது' என்று தோன்றியபொழுது விரும்பத் தகாததாயிற்று.

தன்னை அவர்கள் கொல்லவரினும் தான் கௌரவர்களைக் கொல்லப் போவதில்லை என்று மேலும் கூறிய அர்ஜுனன் எதிரிகள் பாவிகளாயினும் அவர்களை வதைப்பதால் தனக்குப் பாவமே வரும் எனக் கருதுகிறான்.

பாவிகளா மற்றிவரைக்
கொன்றாலும் பாவமே
மேவும்எமை ஆதலின் இம்
மேவலரைச்—சாவநினைந்
தேதமுயல் கிற்கிலோம்
என் சுற்றம் கொன்றிங்கே
மாதவனே
யாம்சுகிப்போம் வந்து.

(இ-ள்) மாதவனே!–கண்ணா!, பாவிகள் ஆம் இவரைக் கொன்றாலும் பாவிகளாயிருக்கிற இந்தக் கௌரவர்களைக் கொன்றாலும், எமை பாவமே மேவும்-எங்களைப் பாவம்தான் அடையும், ஆதலின்-ஆகையால், இம் மேவலரை-இப் பகைவர்களை, சாவ நினைந்து ஏதம் முயல்கிற்கிலோம் கொல்ல எண்ணிக் குற்றத்தைச்செய்ய முயல மாட்டோம், இங்கே வந்து-இப் போர்க்களமடைந்து, சுற்றம் கொன்று-உறவினரைக் கொன்று, யாம் என் சுகிப்போம்?-நாங்கள் என்ன சுகத்தைப்பெறுவோம்?

4
நிஹத்ய தார்த்த ராஷ்ட்ராந்ந:
3
காப்ரீதி ஸ்யாஜ் ஜனார்தன
3
பாப மேவாச்ரயே தஸ்மாந்
ஹத்வைதா நாத தாயிந:

(இ-ள்) ஜனார்தன!-கிருஷ்ணா!, தார்த்த ராஷ்ட்ராந்-திருதராஷ்டிர புத்திரர்களை, நிஹத்ய-கொன்று, ந:-நமக்கு, கா ப்ரீதி: ஸ்யாத்?-என்ன பிரீதி உண்டாகப் போகிறது?' ஆததாயிந; ஏதாந்-ஆததாயிகளான இவர்களை, ஹத்வா-கொன்று, அஸ்மாந்-நம்மை, பாப மேவ-பாவமே, ஆச்ரயேத்-அடையும்.

தீ வைப்பார், விஷம் இடுவார், கொலை செய்வார், நிலத்தை அபகரிப்பார், வழிப்பறி செய்வார், பிறன் மனைவியைக் காதலித்துச் செல்வார் என்ற அறுவகைப் பாவம் செய்தோர் ஆததாயிகள் எனப்படுவர். ஆததாயிகள் என்ற தன் பொருளைக் குறிப்பிடவே 'பாவிகள்' என்றார். இவ்வாறு கொடுஞ் செயல்களுமுள்ள துரியோதனாதியரை விசாரணையின்றிக் கொல்வது தருமமாயினும், தன் செய்ய மாட்டாமைக்கு மேலும் காரணம் கூறுகிறான்.

எதிரியாக வந்த கௌரவாதியர் பலர். மண்ணாசையால் விவேகம் குறைந்து குல நாசத்தால் வரும் பாவத்தையும் மித்திர துரோகத்தின் பாதகத்தையும் அவர்கள் அறியவில்லை. போரில் பலர் இறந்தால் குல நாசமும் அதனால் அனாசாரமும் அதனால் பெண்களின் ஒழுக்கக்கேடும் ஏற்படும். பெண்களின் ஒழுக்கக் கேட்டால் வர்ணக் கலப்பு உண்டாகி அனாதியான குல தர்மங்கள் கெடும். அதனால் நரக வாசத்திற்கு ஏதுவாகும். இதை அறிந்து வைத்தும் இப் போரை நான் மேற்கொண்டால் நரகத்திற்கு ஆளாவேன். குலாசாரங்களை இழந்து மக்களை நரகத்துக்கு எய்துவித்து நானும் நரகம் செல்வதைவிட நிராயுதபாணியாகி இறப்பதே நல்லது இதோ வில்லை எறிந்து விட்டேன். எதிரிகள் என்னைக்கொல்லட்டும் என்று கூறி வில்லை எறிந்து ரதத்தில் உட்கார்ந்தான்.

ஒருவன் பலருக்கு அன்னதானம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். கரிகாய்களில் உள்ள கிருமிகள் இறந்து போவது அவன் கண்ணில் பட்டது. ஜீவகாருண்யம் மேலிட்டது. அஹிம்ஸைக்கொள்கையே தர்மம் என்று அன்ன தானத்தை வேண்டாம் என்று கைவிட்டு விட்டான்.

க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த அர்ஜுனனும் போரை மேற்கொண்டான். எதிரிகள் உறவினராயிருக்கக் கண்டு சோகம் தோன்றியது. சோக முதிர்ச்சியில் மோஹம் உண்டாயிற்று. அம் மோஹத்தால் தனக்குரிய கடமையையும், தர்மத்தையும் மறந்து சந்நியாசிகள் எல்லாக்காலங்களிலும் மேற்கொள்ள வேண்டிய அஹிம்ஸையைத் தனக்கு மேலான தர்மமாக நினைத்தார். அதனால் நன்கு ஆராய்ந்து ஏற்கனவே மேற்கொண்டிருந்த செயலையும் கைவிடலானான்.

5

ஸாரமும் பலனும்

மனதினால் தீர ஆலோசனை செய்த பின்னரே வாக்கினால் வெளியிட வேண்டும். அதைச் செயலாக ஆற்றும்போது கலக்கம் கொள்ளலாகாது. அர்ஜுனனே போருக்கு ஸ்ஸந்நாஹம் செய்து போர்முனையை அடைந்தான், எதிரிகளாக வந்த பந்து மித்திரர்களைப்பார்த்த போது அவன்மனம் கலங்கிற்று. தென்றல் வீசும்பொழுது விசிறியின் அவசியம் இல்லாது போகிறது. அதே போல் விசேஷ தர்மத்தை மேற்கொண்டு போர் செய்ய வந்த க்ஷத்திரியனுக்கு ஸந்நியாசிகளின் விசேஷதர்மமாகிய அஹிம்ஸை சாமான்ய தர்மமாக முடிவதால் அதை அனுஷ்டிக்க வேண்டிய அவசியம் இல்லாது போகிறது. போரில் உறவினரே பகைவராய்த் தோன்றினாலும், நோயினால் பருக்கும் உடல் இளைக்க மருந்துண்பது போலவும், உடலில் தோன்றிய கட்டியைக் கத்தி கொண்டு அறுப்பது போலவும், கொல்லுதல் க்ஷத்திரியனுக்குக் கடமையாகும். கலக்கத்தால் விவேகம் குன்றிய அர்ஜுனன் இவ்வுண்மையை உணரமாட்டாது எதிரிகளைப் பந்து மித்திரர்கள் எனக் கருதி போர் செய்ய மாட்டாமல் சோகம் கொண்டு தனது நிலையைக் கண்ணனிடம் தெரிவித்தான். இப் பகுதி கீதையில் 'விஷாத யோகம்' எனப் பெயர் பெறும். விஷாதம் என்னும் சொல் சோகம் என்று பொருள்படும். யோகம்—(நன்மையில்) சேர்ப்பது என்று பொருள்பட்டு, நேராகவாயினும் பரம்பரையாகவாயினும் முக்தியில் கொண்டுபோய்ச் சேர்க்கும் வழிகளையே விசேஷமாகக் குறிக்கும். அர்ஜுனனது சோகம் அவனை ப்ரும்ம வித்தையைக் கேட்டல் ஆகிற நன்மையிற் கொண்டு சேர்த்து முடிவாகப் பேரின்பமாகும் முக்திக்கும் சாதனம் ஆயிற்று. அதனால் 'அர்ஜுன விஷாத யோகம்' எனவும் சொல்லப்பட்டது.

பலனை விரும்பாது கருமத்தைச் செய்வதையே கீதை அடிக்கடி

வற்புறுத்துகிறது. மஹாத்மா போன்ற பெரியோர்கள் அவ்வாறே கருமத்தை விடாது ஆற்றினார்கள். பலனை விரும்பாமலே தினந்தோறும் பகுதியாக வேறு பாராயணமும் செய்து வந்தார்கள். ஆனால் பலனை விரும்பிப் பாராயணம் செய்வார்க்குக் கீதையைப் போல் மிக மிக உயர்ந்த நன்மைகளைத் தரவல்லது வேறு எதுவும் இல்லை என்று பாத்ம புராணம் கூறுகிறது. கீதையின் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் உரிய பலன் ஒவ்வொரு கதையாகச் சொல்லப் படுகிறது.

பலனைக் கூறும் கதை

ஸுசர்மா என்ற பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் தன் மரபிற்குரிய வைதிக கர்மாக்களைச் செய்யாது அடியோடுவிட்டான். உழவுத்தொழிலை மேற்கொண்டு மாமிஸாகாரமும் மதுபானமும் செய்யலானான். ஊரார் 'பாவி' என்று நிந்திக்கும் படியான தீயகுணங்கள் அவனிடம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இவ்வாறு வாழ்ந்தவன் ஒரு நாள் திடீரெனப் பாம்பு கடித்திறந்தான்.

மறு உலகில் தன் பாபத்திற்கேற்ற நரக தண்டனைகளை அனுபவித்த பின்னர் பூமியில் ஒரு காளை மாடாகப் பிறந்தான். அக்காளை ஒரு நொண்டிக்கு உடைமையாயிருந்தது. அந்நொண்டி தன் வேலைகளைக் கவனிக்க அக்காளையை உபயோகப்படுத்தி வந்தபொழுது ஒரு நாள் கடும் வெய்யிலில் அவசர வேலைக்காக அக்காளையை அடித்துத் துரத்தி வேகமாக ஓட்டினான். கடும் வெய்யில் காரணமாகக் காளை களைத்தது. சரியான உணவும் நீரும் பெறுததால் கண்கள் சுழன்று பெரு மூச்சு விட ஆரம்பித்தது. அத்தருணத்தில் மாட்டுக்கார நொண்டியின் அடி அதிக வேதனை தரவே நிற்கவும் மாட்டாமல் வாயில் நுரை ததும்பக் கீழே விழுந்தது. சாகவும் மாட்டாமல் பிழைத்து எழுந்திருக்கவும் மாட்டாமல் காளை தாங்க முடியாத வேதனையை அடைந்தது.

அங்கு வந்த வழிப்போக்கர் பலர் கிடைகொள்ளாமல் தவித்த காளை மரணாவஸ்தையில் இருப்பதைக் கண்ணுற்றனர். நெடுநேரம் அவ்வாறே தவிப்பது கண்டு மனம் இரங்கித் தத்தம் புண்ணியத்தை அக்காளைக்கு அர்ப்பணம் செய்து அது நற்கதி பெறப் பிரார்த்தித்தனர். அப்பொழுதும் காளையின் வேதனை அதிகரித்ததே ஒழிய அது இறக்கவும் இல்லை, பிழைக்கவும் இல்லை. சிறிது நேரஞ் சென்ற பின் அவ்வழியாக ஒரு தாஸி வந்தாள். தனது புண்யத்தையும் இன்னதென்று அறிந்திராத ஞான சூன்யையாய் இருந்தாள். பிறர் தமது புண்யத்தை அர்ப்பணம் செய்வதைப்பார்த்து அவளும் விளையாட்டாய் தன் புண்யத்தை (அர்ப்பணம்) என்றாள். அந்த க்ஷணமே காளை கஷ்டமின்றி உயிரைவிட்டது. தாஸி அளித்த புண்ணியத்தின் காரணமாக யம லோகத்தில் நன்கு வரவேற்கப் பெற்றது. நரகவேதனை எதுவும் அடையாமல் உத்தம ஜன்மமாகிய மனித ஜன்மத்தில் அந்தணர் மரபில் பிறக்கும் பாக்கியம் பெற்றது. அந்தணர் மரபில் உதித்துத் தக்க வயதை அடைந்தபோது பெரியோர் அருளால் முற்பிறப்பின் ஞாபகம் வந்தது.



மிருதங்கக்காரர்:—வித்வான் பனங்குடி பஞ்சாமி அய்யருக்கு மிருதங்கம் வாசிக்கிறது ரொம்ப கஷ்டம் அண்ணா''

அண்ணா:—ஏன்? அவரோடே சேர்ந்து வாசிக்கிறது அவ்வளவு சிரமமா?

மிருதங்கக்காரர்:— இல்லேண்ணா! அவர் சங்கதிகளை உதிர்க்கிறபோது நம்ப மேலே எச்சில் துப்பரார்''

அதனால் அவ்வந்தணன் தனக்கு மாட்டுப் பிறப்பில் உதவி செய்த வேசியிடம் சென்றான். தனக்கு அர்ப்பணம் செய்த புண்ணியம் யாதெனக் கேட்டான். அவள் எனக்கு எதுவும் தெரியாது, நான் வளர்க்கும் கிளியின் பேச்சு என் மனதை இழுக்கும். அதை மனம் உருகக் கேட்டேன். அதுவன்றி வேறு நற்செயல் எதுவும் என்னிடம் இருப்பதாகத் தெரியவில்லை என்றாள். முற்பிறப்பில் ஸுசர்மா எனப்பட்ட அவ்வந்தணன் உடனே அக்கிளியிடம் சென்று 'நீ யார்? நீ அடிக்கடி சொல்வது யாது? அதை யாரிடம் கற்றாய்?' என்று கேட்டான். கிளி பதில் கூறியது.

முற்பிறப்பில் நான் மகா பண்டிதனாயிருந்தேன். அப்பொழுது கல்விக்கேற்ற ஒழுக்கமும், வினயமும் என்னிடம் இல்லை. பொறாமை கொண்டு பிற வித்வான்களை நிந்திப்பதில் என் பெரும் பொழுதைப் போக்கி வந்தேன். இறந்தபின் தீவினைக்கேற்ற தண்டனையை யமன் உலகில் அனுபவித்தபின் கிளியாகப் பிறந்தேன். பிறந்த பொழுதே தாயை இழந்து உணவின்றித்தவித்த என்னை எடுத்து முனிவர்கள் கருணையோடு வளர்த்தனர். அங்கு முனிகுமாரர்கள் சொல்லும் கீதை முதல் அத்தியாயத்தை அடிக்கடி நான் கேட்பதுண்டு. கேட்டதையே நானும் அடிக்கடி கூறுவதுண்டு. ஒருநாள் என்னை ஒரு வேடன் பிடித்து இத்தாஸியிடம் விற்றுவிட்டான் நான் இங்கு வந்தது முதல் முனிகுமாரர்களிடம் கேட்ட கீதை முதல் அத்தியாயத்தையே சொல்லி வருகிறேன். தாஸியால் உனக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது அவள் என்னிடம் கீதை முதல் அத்தியாயத்தைக் கேட்டதின் பலனே ஆகும். முதல் அத்யாயச்ரவண பலத்தால் நீ காளைப்பிறப்பு நீங்கி உத்தமப்பிறப்பைப் பெற்றாய். நானும் இவ்வேசியும் நற்கதி பெறப் போகிறோம். என்று கூறியதும் கிளி தன்னுருவை விட்டு ஒளி வீசும் உடல் பெற்று விமானம் ஏறி வானுலகு சென்றது. வேசியும், அந்தணனும் அதைப் பாராயணம் செய்து நற்கதி பெற்றனர்.

★

(மேல்)

இந்திய ராணுவத்தில் உள்ள வீரர்களுக்கு வழங்கும் பொருட்டு பிரபல இந்திய ஸிகரெட் கம்பெனியைச் சேர்ந்த நிர்வாகிகள் பிரதம மந்திரி பண்டித ஜவாஹரிடம் லட்சத்து ஐம்பது ஆயிரம் சிகரெட்டுகளைக் கொடுத்தனர். டில்லியில் நேரு அந்த ஸிகரெட் டின்களில் ஒன்றைப் பார்வையிடுகையில் எடுத்த படம்.

(கீழ்)

சமீபத்தில் டில்லியில் நடந்த டில்லி மாகாண சமூக சேவை மகாநாட்டில் ராஷ்டிரபதி பட்டாபி பேசினார். பிரதம மந்திரி நேரு தலைமை வகித்தார். பட்டாபி பிரசங்கத்தை அவர் செவிசாய்த்துக் கேட்கிறார்.

★



10
பவனி வந்த பாதரட்சைகள்

★

'பண்டிதநேருவின் பாதரட்சை குறித்துப் பேச ஆரம்பித்து என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தோமே, நீ வேறு ஏதோ பாதரட்சைக் கதை சொல்லப் போகிறதாய் வாக்களித்திருக்கிறாய்' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தாள் கமலா.

'ராவணேச்வர சக்கரவர்த்தியின் பாதரட்சையைத் திலோத்தமை என்ற தெய்வமாது தலையால் சுமந்து கௌரவித்ததைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தோம். அதை ஒட்டி நீ சரித்திர காலத்திலும் யாரோ ஒரு சக்கரவர்த்தி தன் பாதரட்சைக்குக் கௌரவம் தேடியதாகச் சொன்னாய்' என்றாள் ஸரோஜாவும் என்னை நோக்கி.

'டெல்லீசுவரரான ஔரங்கசீப் என்பவரைத்தான் குறிப்பிட்டேன். இந்தக் கடைசி மொகலாயச் சக்கரவர்த்தி சுமார் 300 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர் என்பதையும், இந்துக்களுக்குக் கொடுமை செய்தார் என்பதையும் அறியாதார் இல்லை. இவரது மதாவேசம்தான் இந்துக்களுக்கு இவர் தீங்கு இழைத்ததற்குக் காரணம் என்றும் சாதாரணமாய்ச் சரித்திரம் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் இவரது குணாதிசயத்தின் ஓர் அடிப்படை அம்சத்தை உள்ளவாறு வெளியிடும் பாதரட்சைக் கதையை அறிந்தவர் 'மிகச் சிலரே' என்றேன் நான்.

'அந்தக் கதையைத்தானே 'கேட்க விரும்புகிறோம்' என்றாள் ஸரோஜா.

'ஔரங்கசீபின் பாதரட்சைகளில் ஒன்றை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒரு பெரிய யானை மீது அம்பாரி வைத்து ஏற்றி வைப்பார்கள். அந்த யானை பிரமாதமாய் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சக்கரவர்த்தியின் பலவகையான விருதுகளும் யானையைச் சூழ்ந்து செல்லும்' என்று நான் கதை சொல்ல ஆரம்பித்தேன்.

அந்தப்பீடிகையுடன் ஸரோஜா அந்தக் கதையைச் சொல்வதற்குள்ளே கமலா குறுக்கிட்டு யாருக்குத்தான் தெரியாது, அந்தக்கதை. ஒரு குருவும்சீடனும் பாதசாரியாக யாத்திரை போகையில் வழியிலுள்ள ஓர் ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டது. "குருபாதமே கதி என்று இறங்கி அக்கரை சேர்ந்துவிட்டானாம் சீடன். குருமகாராஜாவோ நம்முடைய பாதத்திற்கு அவ்வளவு சக்தி இருக்கிறதே என நம்பி "என்பாதமே கதி!" என்று சொல்லிக்கொண்டே ஆற்றில் இறங்கி ஆற்றோடே போய் விட்டாராம். இதுதானே நீ சொல்ல வந்த கதை? இப்படியே ராமன் பாதரட்சையைக் கௌரவித்த பரதன் நலம் அடைந்தான் என்றும், லங்கேசுவரனும் டெல்லீசுவரனும் நாசம் அடைந்தார்கள் என்றும் சொல்லப்போகிறாய். இவ்வளவு தானே?' என்றாள்.

'உன்னுடைய இந்த ஊகம் சரிதான். ஆனால் ஔரங்கசீபின் பாதரட்சைக் கதையினுடைய போக்கை உன்னால் ஊகிக்க முடியுமா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'ஏன் முடியாது? சிங்காசனத்தில் அந்தப்பாதரட்சையை வைத்துக் கௌரவித்த சிற்றரசர்கள் என்ன செய்திருப்பார்கள், தெரியுமா? பாதரட்சையைக் கொலு வைத்து அதன் முன்னே முடி வணங்கிநின்று கப்பம், காணிக்கை முதலியவைகளைக் கொட்டிக் கொடுத்திருப்பார்கள்' என்றாள் கமலா.

சரோஜா;—'பிறகு?'

கமலா:—'பாதரட்சை தன் நாட்டை விட்டுப் போகும்போது, அரசனும் உடன் போய்ப் பெரும் பணிவுடன் வழியனுப்பியிருக்க வேண்டும்?

ஸரோஜா:—'பிறகு?'

கமலா:—'இப்படியெல்லாம் டெல்லீசுவரரின் மாட்சிமை தங்கிய பாதரட்சை வந்தனோபசாரங்களையும், கப்பம் காணிக்கைகளையும் பெற்றுக்கொண்டு தேசமெங்கும் பவனி வந்திருக்க வேண்டும்?

ஸரோஜா:—'அப்பால்?'

கமலா:—'இதற்கு மேலும் என்னால் ஊகிக்க முடியும்–விருது வகைகளோடும், படை பரிவாரங்களோடும் வெகு கோலாகலமாய்ப் பவனி வந்த பாதரட்சையை "மலை எலி" என்று சில சரித்திர புஸ்தகங்கள் குறிப்பிடும். சிவாஜி திருடிக்கொண்டு போயிருக்கலாம்!'

அதற்கு நான் சொன்னேன்: 'அதுதான் இல்லை. எப்படியோ மகாராஷ்டிர தேசத்தையும் கடந்து, அந்தப் பாதரட்சை தமிழ்நாட்டுக்கும் வந்துவிட்டது'

'அப்படியா செய்தி? அப்படியானால் வட ஆரியர்களுக்குத் திராவிடர்களா தோற்பவர்கள்? தமிழர்களின் கப்பம், காணிக்கை, மரியாதை உபசாரங்களையும் பாதுஷாவின் பாதரட்சை சம்பிரமமாகப் பெற்றுக்கொண்டு போயிருக்கும்' என்றாள் கமலா.

நான் சொன்னேன்: 'அதுதான் இல்லை, பல திவ்ய தேசங்களிலும் பக்தர்களுக்கிடையிலும் பவனி

வந்த பாதரட்சை மதுரைமா நகரின் எல்லைப்புறத்தை அடைந்துவிட்டது. அப்போது அங்கே **ரங்க கிருஷ்ணமுத்து வீரப்பர்** என்ற நாயக்க அரசர் ஆட்சி செலுத்தி வந்தார்.'

'அந்த நாயக்கரும் பக்தர்தானே, பக்தி செலுத்தியிருப்பாரே?' என்று கேட்டாள் கமலா.

'அதுதான் இல்லை. நாயக்கர் பாதரட்சையை எதிர்கொண்டு அழைக்கவே வரவில்லை. மொகலாய வீரர்கள் இந்த பக்திக் குறைவைக் கண்டு அதிசயம் அடைந்தார்கள்' என்றேன் நான்.

'பிறகு?' என்று அதிசயமாய்க் கேட்டார்கள் கமலாவும்,ஸரோஜாவும். 'மதுரை தவிடு பொடியாய்ப் போயிருக்குமே!' என்று கவலைப்பட்டாள் ஸரோஜா.

'யானையும் பாதரட்சையும் நாயக்கரின் ராஜ சபைக்கே வந்துவிட்டன, சக்கரவர்த்தியின் விருதுகளுடனும், பரிவாரங்களுடனும்', என்று நான் சொல்லும்போதே கமலா குறுக்கிட்டு, 'பாதுஷாவின் பாதரட்சை தாங்கிய யானை கம்பீரமாக அடியிட்டு வந்திருக்குமே!' என்றாள்.

'ஆம், அந்த யானையிடமிருந்து ஆடம்பரமாக உடை தரித்திருந்த ஒரு மொகலாய தளபதி பாதரட்சையை எடுத்துக்கொண்டு தானும் கம்பீரமாக அடியிட்டு நாயக்கரை நோக்கி வந்தான்' என்றேன்.

'நாயக்கர் ப்யபக்தியோடு......' என்று கமலா சொல்லி முடிப்பதற்குள் நான், 'அதுதான் இல்லை. மொகலாய தளபதி பாதுஷாவின் பாதரட்சையைச் சிங்காதனத்தில் வைக்கவேணுமென்று கொண்டு போனதுதான் தாமசம், கனல் எழ விழித்தன கண்கள்: படபடத்தது மீசை; "போடு கீழே" என்று இடித்தது குரல்!' என்றேன்.

'ஐயோ! மதுரை தவிடுபொடியாகுமே!' என்று கலங்கினாள் ஸரோஜா.

'யார் குரல்? யார் கண்கள்?' என்று மயங்கினாள் கமலா.

'நாயக்கரின் இடிக்குரல் கேட்டு, அந்த உக்கிர நரசிங்க ஆவேசம் கண்டு, வீரனான மொகலாய தளபதியும் திகைத்தான்' என்றேன்.

அந்தத் தளபதியைப்போலவே திகைத்துப் போனார்கள் கமலாவும், ஸரோஜாவும்.

நான் கதையைத் தொடர்ந்தேன்:

'போடடா கீழே என்ற சிங்க கர்ஜனை மீண்டும் எழுந்ததும், மொகலாய தளபதியின் கைகளும் நடுங்கிப் பாதரட்சையைக் கீழே போட்டுவிட்டன. "இதுதான் பாதரட்சையின் உபயோகம்" என்று சித்தாந்தம் செய்பவர் போல் நாயக்கர் பாதுஷாவின் அந்த ஒற்றைப் பாதரட்சையைத் தம்முடைய கால் ஒன்றில் மாட்டிக்கொண்டார். மாட்டிக்கொண்டு, "நம்முடைய இரண்டு பாதங்களுக்கு இரண்டு பாதரட்சை தேவை என்பது உன் பாதுஷாவுக்குத் தெரியாதா?" என்று கோஷித்தார்.

'இது என்ன கோர்ஷம்! மதுரை தவிடுபொடியாகவில்லையா? நாயக்கரின் சிங்காசனம் தூள்தூளாகப் போய்விடவில்லையா?' என்று பெருங் கவலையோடு கேட்டாள் ஸரோஜா.

'அப்படித்தான் பயமுறுத்தினான் மொகலாய தளபதி. ஆனால் ரங்க கிருஷ்ணமுத்து வீரப்பநாயக்கர் மதுரைக்கு வந்திருந்த மொகலாயப் படையைத் தாக்கித் துரத்திவிட்டார். மொகலாய வீரர்களில் சிலரே "தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம்" என்று டெல்லிபோய்ச் சேர்ந்தார்கள்' என்றேன்.

'டெல்லிசுவரருக்குக் கோபம் வரவில்லையா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'அவ்வளவு தூரத்திலே பொங்கிய கோபம் மதுரையை எட்டிப் பார்க்கவும் இல்லை. மகாராஷ்டிரர்களைச் சமாளிப்பதே கஷ்டமாகப் போய்விட்டது பாதுஷாவுக்கு' என்றேன்.

'ஆனால் அந்தப் பாதரட்சை?' என்று ஆவலாய்க் கேட்டாள் கமலா.

'இனிமேல் பாதரட்சை பவனி போகவேண்டாமென்று பாதுஷா நிறுத்திவிட்டார். அதுமுதல் பாதரட்சை அவரைப் பிரிந்து நாடு சுற்றியதுமில்லை, சிங்காசனங்களில் ஏறிக் கொலுவீற்றிருந்ததுமில்லை' என்றேன்.

இந்தப் பாதரட்சைதான் திலோத்தமை தேவியின் திருமுடி மீது பவனிசென்ற பிரதாப லங்கேசுவரனின் பாதரட்சையையும் வென்றுவிடுகிறது!' என்றாள் கமலா.

'வேறொரு பாதரட்சைக் கதை எனக்குத் தெரியுமே' இவ்வளவு பெரிய கதைஇல்லை' என்றாள் ஸரோஜா.

சொல்லும்படி நாங்கள் கேட்டுக்கொண்டதும் சுருக்கமாகச் சொன்னாள் ஸரோஜா: நம் தமிழ்நாட்டில் குருமூர்த்தி ஒருவர் தம் இஷ்ட தெய்வத்தை விக்கிரக ரூபமாகப் பூஜித்துக்கொண்டிருந்தார். தம்முடைய உபாசனாமூர்த்தியைத் தாம் போகும் அயலூருக்கு எடுத்து வரும்படி குரு சீடனுக்கு ஒரு சமயம் கட்டளையிட்டார். அந்த வழியெல்லாம் புண்ணிய பூமியென்று தாம் பாதரட்சையும் அணிந்துகொள்ளாமல் குரு புறப்பட்டார். ஆகவே குருவின் பாதரட்சைகளையும் எடுத்துப் போக வேண்டியது இச்சீடன் கடமை ஆயிற்று. இவனோ குரு வழிப்பட்டு வந்த விக்கிரகத்தோடு அந்தப் பாதரட்சைகளையும் சேர்த்து ஒரே மூட்டையாகக் கட்டிக்கொண்டு போனானாம். சுவாமியோடு பவனி கிடைத்தது பாதரட்சைகளுக்கும்! குரு திகிலடைந்ததும் சீடன் "குருதேவரே! உம்முடைய தேவருக்கு என்னுடைய தேவர் எந்த வகையில் தாழ்வு?" என்று கேட்டுவிட்டானாம். குரு விக்கிரகத்தைப் பூஜித்தாரென்றால் குருவின் பாதரட்சைகளைச் சீடன் தெய்வ சமானமாய்ப் பூஜித்து வந்தானாம்'

'ஆஹா, பரதனும், ஔரங்கசீப்பும் பாதரட்சைகளைச் சிங்காசனத்திற்கு உயர்த்தினார்கள் என்றால், இந்தச் சீடன் தெய்வத்திற்கே சமானமாக்கிவிட்டான் பாதரட்சைகளை! என்றாள் கமலா.

'எனினும் பாதுஷாவின் பாதரட்சைக்கதைதான் விசேஷமானது. இந்தச்சீடனுடைய விக்கிரக மூட்டையிலும் பரதன் தலைமீதும் பவனி போனவை பிறர் பாதரட்சைகள் அவ்வளவுதானே? சர்வாதிகாரிகளோ— ராவணனைப் போல் இதிகாச புருஷர்களானாலும், ஔரங்கசீப் முதலானவர்களைப்போல் சரித்திர புருஷர்களானாலும்— தங்களையும் தங்கள் பாதரட்சைகளையும்தான் கௌரவிப்பது வழக்கம்' என்றேன்.

கதலீபுர நாடகம்



எஸ். ஜே.

அத்தியாயம் 11

சேகரன் சென்னையில் நடேசய்யர் அவனைக்கண்டு பிடிக்க முடியாத ஒரு மூலையில் இருந்த ஹோட்டலொன்றில் தங்கினான். அவன் மனது மிகவும் குழப்பமடைந்திருந்தது. விசாலாட்சியிடம் அவன் தன் காதலைத் தெரிவிப்பதற்கு முன்னால் இந்தப்பயங்கர சம்பவம் நடந்து விட்டது. இதுவரை சேகரன் ரொம்பக் கஷ்டப்பட்டு பெர்னார்ட்ஷாவினால் விசாலாட்சியின் மனதில் ஏற்பட்டிருந்த காதலைப்பற்றியும், கல்யாணத்தைப்பற்றியும் இருந்த விசித்திரமான அபிப்ராயங்களைப் போககியிருந்தான். காளிதாஸனையும் அவனுடைய சிருங்காரரஸ மேன்மையையும்பற்றிச் சொல்லியிருந்தான். ஷெல்லியின் பாடல்களையும், பாரதியின் கண்ணன்-கண்ணம்மா பாடல்களையும் கொடுத்துப் படிக்கச் சொல்லியிருந்தான். இனிமேல்தான் அவன் நிலாவைப்பற்றியும், இளந்தென்றலைப்பற்றியும் பேசவேண்டும் என்று நினைத்திருந்த சமயத்தில் இந்த அக்கிரமம் நடந்து விட்டது. இனிமேல் பயங்கரத்தை எப்படி வழிக்குக் கொண்டு வருவது? மறுபடியும் எப்படி விசாலாட்சியைப் பார்க்க முடியும்?.........

மனதைக் கொஞ்சம் சமாதானப்படுத்திக் கொள்வதற்காக அதை வேறு வழிகளில் திருப்ப முயன்றான். கையிலிருந்த தினசரிப்பத்திரிகையை மேலோட்டமாகப் பார்த்தான். அவ்வளவு அலட்சியமாக அவன் பார்த்துங்கூட ஒரு விளம்பரம் அவனுடைய கவனத்தைக்கவர்ந்தது.

ஆயிரம் ரூபாய் இனாம்!

''எங்கள் வீட்டில் பையனுக்குப் பிரைவேட் டியூஷன் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்த வாத்தியார் ஒரு வைர அட்டிகையைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் விட்டார். அவர் கிட்டத் தட்ட ஆறு அடி உயரம் இருக்கக்கூடும். நல்ல சிவப்பு. நெற்றியில் வலது பக்கத்தில் ஒரு தழும்பு இருக்கும். சுருட்டையான கிராப்புத் தலை. வயது முப்பதுக்குள்தான் இருக்கும். இவரைப் பிடித்துத் தருபவர்களுக்கோ, அல்லது இவரைப்பற்றிய சரியான விவரங்களைக் கொடுப்பவர்களுக்கோ ஆயிரம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும்.

ராவ்பகதூர் பயங்கர நரஸிம்மம்,
ரிடையர்ட் போலீஸ் ஸார்ஜெண்ட்,
கதலீபுரம் போஸ்ட்.''

சேகரனுக்கு இது விளங்காத புதிராக இருந்தது. தன் மாமாவிடமிருந்து தப்பிக்க அவன் ஓடிவந்திருக்கும்போது இந்த அபாண்டம் எப்படி அவன் மீது சுமத்தப்பட்டது என்று அவனுக்குப் புரியவில்லை. மறுபடியும் கதலீபுரத்திற்கு ஓடித் தான் நிரபராதி என்பதை நிரூபித்து விட்டு வரலாமா என்று நினைத்தான். இந்த உலகத்தின் நீதியிலும், நியாயத்திலும் அவனுக்குக் கொஞ்சங்கூட நம்பிக்கை கிடையாது. நிரபராதிகளும் குற்றவாளிகளைப்போலப் பயப்பட வேண்டிய காலம் இது என்பது அவனுடைய கருத்து. ஒரு வைர அட்டிகை, எல்லாம் அதன் மதிப்பு, கிட்டத்தட்ட ஒரு லட்சமாவது இருக்கும். இந்தத் திருட்டைப்பற்றியசமாச்சாரம் இந்தியா முழுவதிலும் உள்ள போலீஸ் இலாகாவுக்குத் தெரிந்திருக்கும். சிவப்புக் குல்லாய்களெல்லாம் சேகரனுக்காகச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருக்கும். இந்தியாவை விட்டு வெளியேறி இரண்டு வருஷங் கழித்துத் திரும்பி வந்தால் அப்போது உண்மைத் திருடனாவது அகப்பட்டிருப்பான், அல்லது இந்த சமரஸமாவது அமுங்கிப் போயிருக்கும் என்று எண்ணினான். ஆகவே இரண்டு வருஷகாலம் அக்ஞாத வாசம் செய்வதுதான் சரியான யோசனை. தான் செய்யாத ஒரு குற்றத்திற்காக இரண்டு வருஷம் அக்ஞாத வாசம் செய்ய வேண்டியிருப்பதை நினைக்க அவன் வெட்கினான்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த சேகரன் பின்புறமாகக் குலுக்கப்பட்டான். சேகரன் திடுக்கிட்டுத் திரும்பினான். நல்ல வேளையாகப் போலீஸ்கா

ரன் அல்ல! அவனுடைய காலேஜ் நண்பன் ராமசாமிதான்.

"என்னடா பிரஹஸ்பதி! ஆளை ரொம்பநாளா காணமுடியவில்லையே? உனக்கு என்னமோ ஏதோ என்று நினைத்தேன்!"

"அது கிடக்கட்டும். சென்னைக்கு வெளியிலே எந்தச் சீமையாயிருந்தாலும் சரி, அங்கே எனக்கு ஏற்றதாக ஏதாவது 'ஜாப்' (வேலை) கிடைக்குமா, சொல்லு?"

"எதற்காகச் சென்னைக்கு வெளியிலே போக வேண்டும்?"

சேகரன் ராமசாமியிடம் உண்மையைச் சொல்லத் தயாராயில்லை.



"உறவுப்பேர்கள் முகத்திலே விழிக்காமல் எங்கேயாவது போய் நிம்மதியாக இருக்கலாம் என்று பார்க்கிறேன். நான் கேட்ட கேள்விக்குப்பதில் சொல்லு!"

ராமசாமி ஒரு நிமிஷம் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு யோசித்தான். அடுத்த நிமிஷம் அவன் முகம் கிரஹணம் விட்ட பிறகு பிரகாசிக்கும் சூரியனைப்போலப் பிரகாசித்தது.

"ஆ! மறந்தே போய்விட்டேன்! ஒரு பேஷான சான்ஸ்!......உனக்கு அமெரிக்காபோக ஆசையுண்டா?

சேகரனுக்கு ராமசாமியின் வார்த்தையில் நம்பிக்கை விழவில்லை. ராமசாமி சந்தர்ப்பம் தெரியாமல் ஏதாவது சொல்லி விளையாடுவதுண்டு.

என்னடா நான்ஸென்ஸ்! சமயம் தெரியாமல் விளையாடறே?"

"அப்போ உனக்கு அமெரிக்காபோக இஷ்டமில்லை, இல்லையா?"

"அமெரிக்கா என்ன, அந்த மானுக்குக்கூடப் போகத் தயார்!"

"பேஷ்! விஷயத்தைக்கேள். எங்க தூரத்து உறவுக்காரர் ஒருவர் மாமா முறை என்று சொல்லலாம். சிங்கப்பூரிலே இவ்வளவு நாளாகத் தேக்கு வியாபாரம் செய்துகொண்டிருந்தார். அவருக்குப் பிள்ளை குட்டி இல்லை..."

"என்னை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வாரா?"

"நன்றாய்ச் சொன்னே! அவர் போன வருஷந்தான் இரண்டாவது தாரம் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவர் காதில் விழுந்தால் உன்னைத் தேக்குக் கட்டையினாலேயே பிளந்து விடுவார்...மேலே கேள். அந்த மனுஷன் ஒரு பேப்பர் உற்பத்திக் கம்பெனி ஆரம்பிக்கப்போகிறார். அதற்கு அமெரிக்காவில் பேபர் உண்டாக்கும் தொழிற்சாலைகளுக்குப்போய் எப்படி அங்கே வேலை செய்கிறார்கள் என்பதைக் கவனிக்கப்போகிறாராம்! அமெரிக்காவிலும் ஒரு வருஷம் சுற்றுப்பிரயாணம் செய்து

விட்டு ஸ்வீடனுக்குப் போய்ப் பார்க்கப் போகிறார்...''

"தேக்கு மர வியாபாரியின் சரித்திரத்தைக் கொஞ்சம் நிறுத்திக்கொள். என்னைப்பற்றிக் கொஞ்சம் கவனி. எனக்கு அந்த மனுஷன் என்ன வேலை கொடுப்பார் என்கிறாய்?''

"எங்க மாமாவுக்கு இங்கிலீஷ் அவ்வளவாக வராது. ரேடியோவில் கௌரவமாய் இங்கிலீஷ் நியூஸ் கேட்டுவிட்டு 'என்ன சொல்றான், ஸார்?' என்று கேட்பார். அவருக்கு இங்கிலீஷில் நன்றாய் பேசக்கூடிய கெட்டிக்கார இளைஞன் தேவை''

"பேஷ்! நான் ஜமாய்த்து விடுவேன். நான் இங்கிலீஷில் பேச ஆரம்பித்தால் அமெரிக்காக்காரர்கள் வாயைப் பிளந்து கொண்டு நிற்பார்கள்...''

அமெரிக்கர்கள் வாயைப் பிளப்பது இருக்கட்டும். நீ பி. ஏ. யில் என்ன கிளாஸ் வாங்கினே?''



"கிளாஸ் கிடக்கட்டும். எம். ஏ. யில் முதல் கிளாஸ் வாங்கிவிட்டு நம்ம லெக்சரர் ஒருவர் நம்மைத் திட்டுவதற்குக்கூட வார்த்தை கிடைக்காமல் ஹப்-பப்-ஹப்-பப் என்று ஜலத்தில் முழுகுகிறவன்போல கொப்புளம் விடுவாரே ஞாபகமிருக்கிறதா? கிளாஸில் என்னடா இருக்கு? அமெரிக்கன் ஸ்லாங் (நடை முதல்பாஷை) பேசுவதிலே என்னை ஒருவன்கூட பீட் அடிக்கமுடியாது. வோட் ஹவுஸின் நாவல்களையெல்லாம் கரைத்துக் குடித்திருக்கிறேன். அதனாலே என் இங்கிலீஷைப்பற்றிக் கவலைப்படாதே!''

"அப்போ நீ என்கூடவா! அவர்கிட்டே உன்னை அறிமுகம் செய்துவைக்கிறேன். கொஞ்சங்கூட பயப்படாதே. உன் சுபாவப்படி தமாஷாகவே பேசு. அவரைமட்டும் நீ நன்றாய்க் கவர்ந்துகொண்டால் நாளைக்கு நீயும் சிங்கப்பூரில் ஒரு தேக்குத்தோப்பு வாங்கிவிடலாம்...''

"அப்படி ஒரு சமயம் வந்தால் நான் உன்னை அமெரிக்காவுக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்...அது கிடக்கட்டும். நீ ஏன் உங்கள் தேக்குமரக்காரரோடு போகாமல் என்னைப் போகச்சொல்லுகிறாய்? அதுதான் எனக்குப் புரியவில்லை,''

"ஓ! அது கஷ்டமான கேள்வி. இதைக்கேள். முதல்காரணம். எங்க அப்பாதான் தீக்ஷிதர் என்று உனக்குத் தெரியுமே; அவர் நான் கிராப் வைச்சுண்டத்துக்கே என்னை ஜாதிப் பிரஷ்டம் செய்யவேண்டும் என்று சொன்னார். ஆபீஸிலே வேலையாயிருந்தா என்ன, பஞ்சக்கச்சம் கட்டிண்டு, ருத்ராக்ஷமாலையுடன் நான் ஆபீஸுக்குப் போகவேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார். அப்படியிருக்க நான் அமெரிக்கா போனால் என்னைத் தேசப்பிரஷ்டம் செய்துவிடுவார். இரண்டாவது காரணம். அந்தத் தேக்குமரத்தோடு நேத்திக்கு இங்கிலீஷில் பேசினேன். என் இங்கிலீஷில் அந்த மனிதனே ஏகப்பட்ட தப்புகளைக் கண்டுபிடித்துவிட்டு என்னைப் பரிகாசம் பண்ணினார். அவரைப் பழி வாங்கவே உன்னை அவரிடம் அனுப்புகிறேன். அப்புறம் மூன்றாவது காரணம். இந்த அமெரிக்காவைப்பற்றிப் பூகோளத்தில் படித்துப் படித்து அமெரிக்காவிடமே வெறுப்பு ஏற்பட்டது. கனடாவின் தலைநகரம் எது என்று நம்ப பூகோளவாத்தியார் கேட்டபோது நான் சைனா என்று சொல்லி உதை வாங்கவில்லையா?''

"அப்புறம் நாலாவது காரணம். நான் அமெரிக்கா போகவேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறது.''

மறுநாள் காலையில் நண்பர்கள் இருவரும் தேக்குமரவியாபாரியான ஸ்ரீமான் கோபாலசாமியைப் பார்த்தார்கள். அவருக்குச் சேகரனின் இங்கிலீஷ் கொஞ்சங்கூடப் புரியவில்லை என்றாலும் அந்த இங்கிலீஷ் அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது. வெகுநேரம் தேக்கு மரங்களை வளர்ப்பதுபற்றியும், தேக்குமரங்களை அரிக்கும் பூச்சிகளைப்பற்றியும், ரங்கூனில் மரவேலை நடக்கும் இடங்களைப்பற்றியும், வருங்காலத்தில் தேக்குமரத்தின் நிலையைப்பற்றியும், இரண்டாம் நூற்றுண்டிலிருந்து இருபதாம் நூற்றுண்டு வரை தேக்குமர வேலைகள் எப்படி விருத்தியாகி வந்திருக்கின்றன என்பதைப்பற்றியும் சரியாக மூன்றரைமணிநேரம் பேசினுர். முடிவில், "நாளைக்கே பம்பாய்க்குக் கிளம்பிவிடுவோம். இன்னும் ஒருவாரத்தில் பம்பாயிலிருந்து எஸ். எஸ். அமெரிக்கா என்ற கப்பல் கிளம்புகிறது." என்றுர் மிஸ்டர் கோபாலசாமி.

அத்தியாயம் 12

சேகரன் போனபிறகு கதலீபுரத்தில் சோபையே கிடையாது என்று கதலீபுரவாசிகள் அபிப்ராயப்பட்டார்கள். (ஆனல் இப்போதுதான் கதலீபுரத்தின் சூழ்நிலை மிகவும் திருப்திகரமாக மாறியிருப்பதாக நடராஜன் அபிப்ராயப்பட்டான்.) அவன் ஊரைவிட்டு ஓடிப்போனது அவர்களில் அநேகருக்கு வருத்தத்தை விளைவித்தாலும் ஒருவிதத்தில் அவர்களுக்குச் சந்தோஷமாக இருந்தது. அந்த ஊரில் உள்ள குளத்தில் கூடும் ஸ்திரீகள் சாதாரணமாய் தங்களுக்கு வேண்டாத ஸ்திரீகளைப்பற்றிய தங்கள் சொந்த விமர்சனங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வார்கள். அல்லது அவரவர்களை வீட்டுக் குழந்தைகளுக்கு வந்திருக்கிற வியாதிகளும், அவற்றுல் அவர்களுடைய குடும்பத்திற்கு ஏற்படும் செலவைப்பற்றியும் விவாதிக்கப்படும். அல்லது ஒவ்வொருவருடைய பிறந்தகத்தின் பெருமைகளும் மற்றவர்களுக்குத் தெரியும்படியாகப் பறைசாற்றப்படும். அவர்கள் மேல் தவறில்லை; அவர்களுக்குப் பேச வேறு விஷயம் கிடைக்காததே காரணம். ஆனல் இன்றே அவர்களுக்கு ஒரு ரசமான விஷயம் கிடைத்துவிட்டது. இதைப்பற்றி மணிக்கணக்காகமட்டும் அல்ல, நாள் கணக்காக, வருஷக் கணக்காகப் பேசிக்கொண்டிருக்கலாம்.

நடராஜனைப் பொறுத்தவரையிலும் அவன் மனதில் கொஞ்சங்கூட அமைதியில்லை. மனச்சாட்சி என்று ஒன்று இருப்பதில் அவனுக்கு நம்பிக்கையே கிடையாது. ஆனலும் அவன் தனியாக உட்கார்ந்திருக்கும்போது அவனுடைய மென்னியை யாரோ பிடிப்பதுபோலத் தோன்றிற்று. சினிமாவில் வில்லன்பார்ட் ஆசாமி தனியாக இருக்கும்போது அவனுடைய எதிரியான கதாநாயகனுடைய உருவம் தோன்றி 'ஹஹ்ஹஹ்ஹா' என்று சிரித்துவிட்டு மறையுமல்லவா? அதேபோல நடராஜனின் கண்களுக்கு எங்கே பார்த்தாலும் சேகரனின் உருவம் தென்பட்டது. இன்னும், நமது நாவல்களில் யாராவது கடுங் குற்றமிழைத்துவிட்டால் அவர்களுடைய மனச்சாட்சி 'லெக்சர்' செய்ய ஆரம்பிக்குமே, அதுபோல நடராஜனின் மனச்சாட்சி அவன் தன்னுடைய பைல்களைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது, "டேய்! நடராஜா!" என்று கூப்பிட்டது. நடராஜன் திடுக்கிட்டு எழுந்தான். பிறகு தன்னுடைய மனச்சாட்சியின் அறைகூவல் என்று தெரிந்த பிறகு, "ஏ மனக்குரங்கே! என்னிஷ்டப்படி நான் செய்வேன். உன்னை யார் கேட்டது?" என்று அதட்டினுன்.

"மாமாவின் வீட்டிலேயே கன்னம் வைக்கும் பாதகனை நான் எங்கும் கண்டதில்லை!" என்றது மனச்சாட்சி.

"சேகரன்கூடத்தான் தன் மாமா வீட்டில் நகையைத் திருடினுனும்!"

"சேகரன் எந்த சந்தர்ப்பத்தில், என்ன காரணத்தினுல் எடுத்தான் என்பது உனக்குத் தெரியுமா?" என்று குறுக்குக் கேள்வி ஒன்றைப் போட்டது மனச்சாட்சி.

"தெரியாது. ஆனல் என் மாமா அதர்ம வழியில் சம்பாதித்த சொத்து அதர்ம வழியில்தானே போக வேண்டும்!"

"பேஷ், பேஷ்! ரொம்ப வாஸ்தவந்தான்! ஆனல் உலகத்தில் அதர்ம சொத்துக்களைக் கிளப்பிக்கொண்டு போவதற்காக பகவான் உன்னை ஏஜண்டாக நியமித்திருக்கிறரோ? நீ இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் என்றுல் எல்லாவற்றிற்கும் ஏஜண்ட் என்று நினைத்துக்கொண்டாயோ?" என்று சொல்லிவிட்டு அந்தப் பொல்லாத மனச்சாட்சி 'இடி, இடி'யென்று சிரித்தது.

"மனச்சாட்சி எவ்வளவு அதிகப்பிரசங்கியாயிருக்கிறது?" என்று நடராஜன் நினைத்துக்கொண்டிருந்தபோது ராவ்பகதூர் பயங்கர நரசிம்மம் கையில் சில காகிதங்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்.

"நம்ம வீட்டில் நகை கெட்டுப் போனுலும் போச்சு, எனக்கு ஒரு அருமையான துப்பறியும் கதைக்குப் 'ப்ளாட்' கிடைத்திருக்கிறது.

நடராஜன் இப்போதுதான் முதன் முறையாக, தான் செய்துவிட்ட தவறுக்கு வருந்தினன்.

"ஆனல் என் கதையில் வருவது வைர அட்டிகையல்ல!"

"பின்னே?"

"வைர ஒட்டியாணம்." வைர அட்டிகையை வைர ஒட்டியாணமாக மாற்றிவிட்ட மேதை முகத்தில் பெருமிதம் தாண்டவமாயிற்று. சபையோர்களிடமிருந்துகரகோஷத்தை எதிர்பார்க்கும் பிரசங்கிபோல ராவ்பகதூர் ஆவலுடன் அப்ளாஸை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனல் நடராஜன் உச்சி மோட்டைப் பார்க்கவே அவர் ஏமாற்றமடைந்தார்.

"நான் அதனுடைய சுருக்கத்தைச் சொல்லுகிறேன், கேளு!"

"எதனுடைய சுருக்கம்?" என்ருன் நடராஜன் தலைக்குமேலிருந்த ஒரு சிலந்திவலையைப் பார்த்துக்கொண்டே.

"முட்டாள்! எங்கே கவனித்துக் கொண்டிருக்கிருய்?......என் துப்பறியும் கதையின் சுருக்கம். அதைக்கொஞ்சம் கேளு.

ஒரு டெபுடி கலெக்டர் வீட்டில் வைர ஒட்டியாணம் திருட்டுப்போகிறது. அவர் துப்பறியும் புலி தங்கசாமியை வரவழைக்கிருர். தங்கசாமி கடைசியில் திருடியவன் டெபுடி கலெக்டரின் மருமான்தான் என்று கண்டுபிடிக்கிருன்..."

நடராஜனுக்குச் சுருக்கென்றது. ஒருகால் மாமாவுக்கே விஷயம் தெரிந்திருக்குமோ? சே! சே! இருக்காது. தெரிந்திருந்தால் அவனிடம் தன்னுடைய துப்பற்றியும் கதையைக்கொண்டு வருவாரா?

"மருமான் என்கிறதை வேலைக்காரன் என்று திருத்திவிடுங்கள். இல்லாவிட்டால் ரொம்ப அசம்பாவிதமாக இருக்கும்"

"வேலைக்காரன் திருடினுல் அதில் சுவாரஸ்யமில்லை.

"அப்போ டெபுடிகலெக்டரே திருடிவிட்டதாக மாற்றிவிடுங்கள்!"

"ஏன்?"

"அவர் தன்னுடைய சொந்தகாரியம் ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தன் மனைவிக்குத் தெரியாமல் வைர ஒட்டியாணத்தைத் திருடிவிடுகிருர்......"

"பேஷ்! நன்ருயிருக்கும்போலிருக்கிறதே! ஆனல் மருமான் திருடவில்லை என்று வைத்துக்கொண்டால் டெபுடி கலெக்டருக்கும் அவருடைய மருமானுக்கும் இடையே நடக்கும் சுவாரஸ்யமான சம்பாஷணைகள் நஷ்டமாகிவிடுமே!... அதனல் பாதகமில்லை. நீ சொன்னபடி எழுதிப் பார்க்கிறேன்......" ராவ்பகதூர் பயங்கரம் தன் அறையை நோக்கி நடந்தார்.

சற்று நேரத்துக்கெல்லாம் பாலுசாமி வந்து சேர்ந்தான்.

"அத்தான்! யார் திருடியிருக்கிருர்கள் என்று நான் ஊகம்பண்ணிவிட்டேன்!"

"எதைடா?"

"அட்டிகையை?"

அட்டிகை என்ற வார்த்தை காதில் விழுந்தவுடன் நடராஜனின் உடல் குலுங்கியது. இதென்ன அதிர்ச்சியின்மேல் அதிர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறதே என்று பயந்தான்.

"யாரு?" என்று ஆவலுடன் கேட்டான்.

"யார் தெரியுமா? சொன்னுல் நம்பமாட்டாய்"

"சொல்லு, சொல்லு, சொல்லு! யாரு, யாரு?"

"மூணு சொல்லு, ரெண்டு யாரு" என்று கணக்குப் போட்டான் பாலுசாமி. யார் தெரியுமா? ராவ்பகதூர் பயங்கர நரசிம்மம், ரிடையர்ட் போலீஸ் ஸார்ஜெண்ட்"

"உங்கள் அப்பாவா?"

"ஆமாம்! தி ஓல்ட் கூஸ்! 'தி டர்ட்டி பிக்! தி மிஸ்சிவஸ் டெவில்!............"

"உங்கள் அப்பா ஏண்டா எடுக்கிருர்?"

"ஏனு! சேகரனை விரட்டுறத்துக்காக!"

"ஏண்டா பிருஹஸ்பதி! உங்க வம்சத்திற்கே மேல் பக்கம் காலிபோல இருக்கு! சேகரன் போனபிறகுதானேடா திருட்டுப் போனதே அவருக்குத் தெரியும்?"

"ஓ! ஓ! ஓ!......ஓ!" என்று சொல்லி முகத்தைச் சுளித்துக்கொண்டான் பாலுசாமி.

"நாலு ஓ!" என்றுன் நடராஜன் பழிக்குப் பழியாக.

"ஆமாம்! இந்த அபூர்வமான யோசனை உனக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான் நடராஜன்.

"இப்போ ஷெர்லக் ஹோம்ஸ் கதை வாசிச்சிண்டிருந்தேன். அதிலே ஒரு கதையைப் படிச்ச போது இந்த ஐடியா தோணித்து!......அதைத் தவிர அப்பா கொஞ்ச நாளாக, திருட்டுப்போன நாள் முதலாக, பைத்தியம்மாதிரி யோசனை பண்ணிண்டு உட்கார்ந்திருக்கார்......ஒரு கொலையாளி கொலை செஞ்சப்புறம் எப்படி இருப்பானோ அப்படி இருக்கார் அவர்"

"ஓ அதுவா? உங்க அப்பா கதை எழுதுகிற வழக்கம் உனக்குத் தெரியாதோ? கொஞ்ச நாளாக அவர் ஒரு சிறுகதை எழுத்தாளராக மாறிக்கொண்டு வருகிறுர்........."

"அப்பா கதை எழுதுகிறுரா?"

"நம்ப முடியவில்லையா? ஏண்டா இப்படி உங்கள் அப்பா கதை எழுதுகிறுர் என்றுல் யாருமே நம்பமாட்டேன் என்கிறுர்கள்."

பாலுசாமி இப்போதுதான் தன் பாயிண்டுக்கு வந்தான்.

"ஒரு அப்ளிகேஷன், அத்தான்!......... இந்த ஊர் காலிப்பசங்களோட சீட்டாடவே கூடாது, அத்தான்!...... அவாமேலே தப்பில்லே அத்தான்! அயோக்கியப் பசங்களோடே ஆடப் போனேனே, என்னைச் சொல்லணும்!"

"அதுக்கு என்னடா இப்போ?"

"எனக்குப் பத்து ரூபாய் பணம் வேணும், அவாளுக்கு நான் கொடுக்கணும்."

"யாருக்குத்தான் வேண்டாம்? எனக்குக் கூடத்தான் வேணும்..........."

சேகரன் இருந்தால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டானென்று பாலுசாமி எண்ணினுன்.

"இதோ பார் பாலு! இப்போ நம்ப பொருளாதார நிலைமை ரொம்பக் கேவலமாயிருக்கு. என் கிட்டே காலணுகூடக் கிடையாது..."

"நான் தரேன்" என்றுன் பாலுசாமி.

"என்ன தரே?" என்றுன் நடராஜன்.

"காலணு! உங்களுக்குக் காலணு வேண்டும் என்று கேட்டீர்களே?"

"முட்டாள்! உன்னிடம் காலணு கேட்கவில்லை. என்னிடந்தான் இல்லை என்றேன்!"

"தாங்க்ஸ்!" என்று சுருக்கமாகச் சொல்லி விட்டு பாலுசாமி மறைந்தான்.

நடராஜன் மனது கொஞ்சம் நிம்மதியடைந்தது. இப்போது அவன் உள்ளத்தில் மற்றொரு எழுச்சி ஏற்பட்டது. அது கொஞ்ச நாட்களாகவே மனதிற்குள்ளே விருத்தியடைந்துகொண்டிருந்தது. அந்தப் புது எழுச்சி வேறு ஒன்றுமில்லை. காதல் காளிதாஸனும், கம்பனும், பாரதியும், ஷெல்லியும் பாடிப்பாடி மகிழ்ந்த சிருங்கார ரஸம். இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் காதலிப்பது என்பது நமது வாசகர்களுக்கு நம்ப முடியாத சமாச்சாரமாக இருக்கலாம். இருந்தாலும் விசாலாட்சியின் கருவண்டுகள்போன்ற விழிகளைப்பார்த்துக்கொண்டிருக்கும்போது நடராஜனுக்குத்தான் ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் என்ற விஷயமே மறந்துவிடும்போலிருந்தது.

(தொடரும்)



உங்கள் காலபலன்

ராவ்

மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் முக்கியமான கிரகங்களெல்லாம் திரிகோணத்திலிருப்பதால் பொதுவாக எல்லா விஷயங்களிலும் மன நிம்மதியிராது. லக்னத்தில் ராகு இருப்பது மனதில் பயத்தை உண்டாக்கும். சனி 5-வது இடத்திலிருப்பதால் உத்தியோகம் சம்பந்தமான கவலைகளும், தாமதங்களும் ஏற்படும். 2, 7 இவ்வீடுகளுக்குடைய கிரகங்கள் 8-ல் இருப்பதால் டிஸம்பர் மாத முடிவு வரையில் பண விஷயத்தில் சங்கடங்கள் இருக்கும். மனைவியானுல் புருஷனுக்கோ, கணவனுயின் மனைவிக்கோ தேக சுகம் பாதிக்கப்படும். 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் முதற்கொண்டு உத்தியோகத்தில் விசேஷ அபிவிருத்தி உண்டு. ஊதிய உயர்வும், செய் தொழிலில் உபாயமான மாறுதலும் ஏற்படும்.முதியவர்கள் இந்த ராசிக்காரர்களுடைய சாதனை, அந்தஸ்து இவை குறித்துப் பெருமிதமடைவார்கள். சிலருக்கு உத்தியோக நிமித்தமாகவோ அல்லது யாத்திரையை முன்னிட்டோ ஓர் தூரதேசப் பயணம் ஏற்பட நியாயமுண்டு. இன்னும் சிலருக்கு முக்கியமான வீட்டுச் சாமான்களை வாங்குவதையொட்டி கடுமையான செலவேற்படும். மனைவியின் தேக நிலைமையையொட்டியும் செலவுகளேற்படலாம். வியாபாரிகளுக்குக் கால நிலைமை செழிப்பாயிருக்கும். அநேக வியாபார இனங்கள் ஏற்பட்டு லாபம் கிடைக்கும். அயல் நாடுகளில் செய்யும் வியாபாரம் கவர்ச்சிகரமாகவும், லாபகரமாகவும் விளங்கும். புதிதாக வந்த வியாபாரங்களால், வர்த்தகம் ரொம்ப வியாபகமடையும். தூரத்திலுள்ள குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்தி பற்றி பெற்றோர்களுக்குச் சந்தோஷகரமான சேதிகள் வரும்.

டிசம்பர் 21, 27, ஜனவரி, 1, 2, 9, 11 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரமான தினங்கள்.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

முக்கியமாக இம்மாத முதல் பகுதியில் இந்த ராசிக்காரர்களுக்குக் கிரஹங்களெல்லாம் சாதகமான நிலையிலில்லை. எல்லா விஷயங்களையும் சேர்த்துப் பார்ப்போமாயின், இம்மாதம் இவர்களுக்குள்ள பலாபலன்கள் பிரகாசமாயிராதென்றே கூறவேண்டும். சனியும் குருவும் பெற்றிருக்கும் ஸ்தான விசேஷமே இதற்குக் காரணம். டிஸம்பர் மாதம் 24 ந் தேதியிலிருந்து எதிர்பாராத பணவசதிகள் ஏற்படும். ஆனுல், எந்தக்காரணத்தை முன்னிட்டும் ஹேஷ்யம், பந்தயம் போன்ற இனங்களில் இறங்கக்கூடாது. இதைக் கவனிக்காமலிருந்தால் நஷ்டந்தான். முதல் பகுதியைவிட இரண்டாம் பகுதி பரவாயில்லை. நிலைமையைச் சமாளிக்கக்கூடும். தேக ஆரோக்கியமின்மையால் சுணக்கமாயிருக்க நேரும். இன்னும் கொஞ்சகாலத்துக்குக் குடும்ப சுகம் இராது. குடும்பத்தில் யாரேனும் முதியவர்களில் ஒருவரால் ஏமாற்றமும், சங்கடமும் ஏற்படலாம். சொந்த ஹோதாவில்வரும் சச்சரவுகள் அனைத்திலும் சமாதானமாகப் போவதையே கொள்கையாக வைத்துக்கொள்ளவேண்டும். சிநேகம், சிநேகிதத்தொடர்பு இவற்றிற்கு இம்மாதம் சுகமானதில்லை. நண்பர்களில் ஒருவருக்கு விபத்தேற்படும். இன்னெரு நண்பருக்குத் துக்கமேற்படும். சிலருக்குச் சகாயம் செய்யும்படி நேரும். மற்றும் சிலருடைய உணர்ச்சியைப் புண்படுத்தவும் கூடும். தனியாகவுள்ள விருஷபராசிக்காரர்கள் இம்மாதம் அத்தனிமைக்குப் பரிகாரம் தேடிக்கொள்வது சுலபம். தசா, புக்தி கெடுதலாயிருப்பின் உயில் தயாரிப்பது குறித்தும், குடும்ப சொத்துப்பிரிவினை குறித்தும் பல சம்பவங்கள் நிகழும். இம்மாத துவக்கத்தில் தாமதம், ஏமாற்றம் இவையெல்லாம் ஏற்படுமென்ருலும், வியாபாரிகளாயிருப்பவர்களுக்கு தங்களுடைய நடவடிக்கைகளை விரிவுபடுத்திக்கொள்ள நல்ல சந்தர்ப்பமுண்டு. கூட்டு முறையில் ஏதேனும் மாறுதல் ஏற்படும். இரண்டாம் பகுதியில் தூரதேசப் பயணம் ஒன்று வாய்க்கும். இன்னும் சில தினங்கள்வரை மனைவி அல்லது கணவனின் தேகாரோக்கியம் பாதிக்கப்பட்டிருக்கும். தற்போதுள்ள வாச ஸ்தலத்தைப்பற்றி மன நிம்மதியிராது. சில

ருக்கு இத்துறையில் கோர்ட் நடவடிக்கைகள்கூட ஏற்படும்.

டிஸம்பர் 22. 24. 27, ஜனவரி 1, 2, 3, 9, 11, தேதிகள் இவர்களுக்கு அனுகூல நாட்கள்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

6, 7, 8, ஆகிய இடங்களிலுள்ள கிரஹங்களின் காரணமாக மிதுனராசிக்காரர்களுடைய குடும்ப, உத்தியோகத் துறைகளில் மன நிம்மதி பங்கமடையும். 8-வது இடத்திலுள்ள பாபக்கிரஹங்கள் வாழ்வின் முன்னேற்றப் பாதையில் தடைகள் ஏற்படுமென்பதைக் குறிக்கின்றன. சுபக்கிரகங்கள் இம்மாதத்தில் இந்த ராசிக்காரர்களுடைய பெயருக்கும், புகழுக்கும் உதவி புரியக்கூடியனவாக அமைந்துள்ளன. சில காலம்வரை மனைவி அல்லது புருஷனின் தேகசுகம் பாதிக்கப்பட்டிருக்கும். பண அபிவிருத்தி உண்டு. இது இம்மாதம் 24-ந்தேதியிலிருந்து தெரியக்கூடிய அம்சம். சிலருக்குக் கோர்ட்டு விவகாரங்கள் ஏற்படலாம். இது அவர்களுக்குச் சாதகமாக முடிவுறும். கடன் வாங்கும்படி நேரும். பணமுடை சிலருக்கேற்படலாம். இவை இம்மாதம் முதற்பகுதியில் முக்கியமாகக் கெடுதலான தசை நடப்பிலிருக்கும்போது சம்பவிக்கக்கூடியதாகும். இரண்டாம் பகுதியில் ஆச்சர்யபடும் வகையில் ஏதேனும் பண லாபம் கிட்டும். இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் இவர்களுடைய நண்பர்களுடைய வாழ்க்கையில் விசேஷமான மாறுதல்கள் ஏற்படும். இருக்கும் வாசஸ்தலத்தில் மாறுதலேற்பட்டு, மனதுக்குப் பிடித்த இடம் கிடைக்கும். இரண்டாம் பகுதியில் உத்தியோகத்தில் அனுகூலம் தரத்தக்க மாறுதலுண்டு. வியாபாரிகளுடைய வாழ்வில் உவகைதரும் காலநிலை பிறக்கும். புதிய வியாபாரத் தொடர்புகள் வசதிகரமான முறையில் ஸ்தாபிதமாகும். கூட்டுமுறை லாபத்தைத் தரும். புதிய வியாபார இனங்கள் மார்க்கெட்டில் இடம் பெறும். குதிரைப்பந்தயத்தில் ஈடுபடுவோருக்கு லாபமுண்டு. ஆனால் ஸெப்டம்பர் மாத ஆரம்பத்தில் பிறந்தவர்கள் இவ்விஷயத்தில் உஷாராயிருக்கவேண்டும். கண்மூடித்தனமாக இதில் ஈடுபட்டால் கடுமையான நஷ்டம். இம்மாதக் கடைசீவாரம் திடீரென்று லாபம் கிடைக்கும்; அல்லதுதேக சுகமின்றிப் போகும். தூரதேசப்பயணம் செய்யக்கூடாது.

டிஸம்பர் 21, 22, ஜனவரி 2, 5, 9, 11 தேதிகள் இவர்களுக்கு உற்ற தினங்கள்.

1948-ம் ஹு டிசம்பர்மீ 16வ முதல் 1949-ம் ஹு ஜனவரிமீ 16வ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்து கொள்ள நட்சத்திரங்களும், பாதங்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

இம்மாதம் கடகராசிக்காரர்களுடைய கிரஹங்களின் போக்கெல்லாம் ஆவேசகரமான தோரணையிலிருக்கிறது. நடப்பிலுள்ள நிலைமை கஷ்டத்தை உண்டாக்கும். உத்தியோகம், குடும்பம், இரண்டிலும் யாரேனும் ஒருவர்மீது கடுமையாக நடந்து கொள்ள நேரும். சுற்றத்திலிருப்பவர்கள் தங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு நடக்காததுபோன்ற உணர்ச்சி உண்டாகும். நம்பினவர் கை விட்டு விட்டது போலவும் தோன்றும். தேக சுகம், உத்தியோகம் குழந்தைகள் இவர்களைப்பற்றிய குறைவுபாடுகளே இம்மாதத்தில் பிராதானமாகயிருக்கும். கூடியவரையில் உத்தியோகத்துறையில் திருப்தி ஏற்படும். குடும்பத்தைப்பற்றியும், குழந்தைகளைப்பற்றியும் சந்தோஷமிராது. தேக சுகவீனத்தால் மனநிம்மதியற்றுப்போகும். வயிற்றுக் கோளாறுலும் மலச்சிக்கலினலும் வயோதிகர்கள் பலவீனமாயிருப்பார்கள். பண விஷயத்துக்கும் இம்மாதம் சுகமாயில்லை பணமுடை ஏற்பட்டு அவசரநிமித்தம் கடன் வாங்கும்படிகூட நேரலாம். உறவினர்களிடமிருந்து அனுதாப வார்த்தைகள் வராமற்போவதுடனின்றி அவதூறுக்கும் ஆளாக நேரிடும். வியாபாரிகளுக்கு இந்த கட்டம் விசேஷமல்ல. வியாபாரம் மந்தமாயிருக்கும். முதல் முடங்கிப்போய்க்கிடக்கும் குதிரைப் பந்தயத்தில் ஏமாற்றந்தான். அனுகூலம் தரும் கிரஹங்கள் திடீரென்று சகாயம் செய்யக்கூடிய நிலையிலிருப்பதால் பணமுடையுள்ளவர்கள் பொறுமையாயிருப்பது நல்லது.

டிஸம்பர் 22, 28, 30, ஜனவரி 1, 2, 7, 11 தேதிகள் இவர்களுக்கு நலம்.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

சனியினுடைய பாப வீட்சண்யத்தால் தாமதங்களும், ஏமாற்றமும் ஏற்படுமென்றுலும் இம்மாதம் ஸிம்மராஸிக்காரர்களுக்கு குருவினுடைய சுப வீட்சண்யத்தால் இறுதியில் பொதுவாக அனைத்திலும் வெற்றிகிட்டும். பண விஷயத்தில் ஆரம்பத்தில் அனுகூலமிருக்கும். இரண்டாம் பகுதியில் முடை ஏற்பட்டு முக்கியமான காரியங்களுக்குக் கடன் வாங்க நேரும். பண விவகாரங்களைப் பொறுத்து பிறருடன் மனஸ்தாபம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

1948-ம் வருஷம் டிசம்பர் மீ 16-ந் தேதி காலையிலுள்ள கிரஹ நிலைமை.

	ராகு	சந்திரன்	
			சனி
செவ்வாய் சூரியன் புதன் குரு	சுக்கிரன்	கேது	

சில சமயங்களில் பண விஷயத்தில் முன் பின் பாராமல் செலவிட நேரும். இதற்காகப் பிறகு வருந்த வேண்டி வரும். உத்தியோகத்தில் மாதத் துவக்கத்தில் ஏமாற்றமே.

இறுதியில் இலாகாவில் அனுகூலம் கிட்டும். நரம்புத்துடிப்பாலும், முக்கியமான சில காரியங்களில் அதிக உற்சாகம் கொள்வதாலும் தேகாரோக்கியம் இம்மாதம் சாதாரணமாகத்தான் இருக்கும். குடும்பத்தில் குழந்தைகளின் விவகாரத்தில் மனம் ஈடுபட்டு நிற்கும். முக்கியமாக ஆவணி மாதம் பிறந்தவர்களானால் இம்மாதத்தில் குழந்தை பிறக்கும்; அல்லது கருத்தரிக்கலாம். அதிக உஷ்ணத்தால் ஆரோக்கியம் திருப்திகரமாயிராது. 6-வது இடத்தில் செவ்வாயும், புதனுமிருப்பதால், இம்மாதம் இரண்டாம் பகுதியில் உறவினர்களுடன் சண்டை சச்சரவுகளேற்படும். சொந்த தூர இடத்தில் இருக்குமானல் அங்கு போக நேரும். அங்கு பெரியவர்களைச் சந்தித்து அவர்களுடைய ஆசியைப் பெறக் கூடும். வியாபாரிகளுக்கு ஹேஷ்ய காரியங்கள் கூடி வரும். இவர்களுக்கு நல்ல சம்பாத்தியமிருக்கும். புதிய வியாபாரம் வெற்றி தரும். சிலருக்குப் பேரக்குழந்தை பிறக்கும். முக்கியமாக இரண்டாம் பகுதியில் மனைவி அல்லது புருஷன் தேக சுகம் பாதிக்கப்படும். நண்பர்கள் விரோதியாவர்.

டிஸம்பர் 22, 25, 28, 30, ஜனவரி 1, 2, 6, 9, 11, 13 தேதிகள் இவர்களுக்குத் தரம்.

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

இந்த மாதத்தில் கன்யா ராசிக்காரர்களுடைய காரியங்கள் வெற்றி பெறுவதற்கு அதிகமாகச் சிரமப்பட வேண்டிவரும். குடும்பத்துறையில் உணர்ச்சிப் பெருக்கெடுக்கும்படி அநேகம் சம்பவங்கள் நிகழும். தேக ஆரோக்கிய நிலை திருப்திகரமாயிராது. குடும்ப விவகாரங்கள், சொத்து அல்லது வீடு, வாஹனங்கள் இவைபற்றிக் கவனம் செலுத்த நேரும். பணக்காரர்களாயிருப்பவர்களைப்பற்றிய விஷயம் அவை. உத்தியோகத்தில் ஓய்வை நாடி லீவ் பெறக்கூடும். இது வயோதிகர்களுக்கு. மற்றவர்களுக்கு உத்தியோக மாற்றம் அல்லது விட்டு மாற்றம் ஏற்படும். ஆத்மீகத் துறையில் பெரியவராயிருப்பவரைச் சந்திக்கலாம். அவர்கள் ஆசி கிடைக்கும். பிறந்த ஊரிலிருந்து தொலைவிலுள்ளவர்களாயின் சொந்த ஊருக்குப் போகக்கூடும் ஆலயங்கள் ஒன்றுவழிபடும்படியான சந்தர்ப்பமும் வாய்க்கலாம் இம்மாத இரண்டாம் பகுதியிலிருந்து பண விஷயத்துக்கு

திருப்திகரம். குழந்தைகளில் ஒருவரைப்பற்றி மன அமைதியிராது. இம்மாதக் கடைசீ இரண்டு நாட்களில் அதிக உஷ்ணத்தால் வயிற்றுக் கோளாறு ஏற்படலாம். குழந்தைகள் விஷயத்

துக்காக எதிர்பாராத செலவுகள செய்ய நேரும்; ஜனவரி மத்தியிலிருந்து சுமார் 1 மாதம் வரைஇது அதிகமாயிருக்கும்: வியாபாரிகளுக்கு இம்மாதம் நல்லது. இக்கட்டத்திலிருந்து வியாபாரத்தில் புதிய வியாபார நோக்கமேற்படும். இரண்டாம் பகுதியில் அகாரணமாக உறவினர்கள் தூற்றுவர். இரண்டாம் பகுதியில்குதிரைப்பந்தயத்தில் ஈடுபடுவர்களுக்குநல்லது.

டிஸம்பர் 20, 21, 25, 28, ஜனவரி 1. 2. 3, 6, 9, 11, 13, தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

துலா ராசிக்காரர்களுடைய பிரபல கிரஹங்களெல்லாம் 3, 5-ல் இருப்பதால் இம்மாதம் மனம் மிக்க பளுவாயிருக்கும். சகோதரர் போன்றிருக்கும் உறவினர்களுடைய விஷயங்கள்பற்றிய சிந்தனையால் மன அமைதி இராது. அவர்களுக்கு உதவும்படியோ அல்லது அவர்களிடம் உதவிபெறும்படியாகவோ இருக்கும். ஒரு தூரதேசப்பிரயாணம் நேரும். தூர இடப் பிரயாணமொன்று நேரலாம். உத்தியோகத் துறையில் உவகை தரும் சம்பவமேதேனும் நிகழும்; அல்லது மேலதிகாரியின் ஆதரவு கிட்டும். குழந்தைகள் நல்ல படியாக விருப்பர்: அவர்களால் திருப்தி உண்டு. இரண்டாம் பகுதியில் பண விஷயத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். கார் வைத்துக்கொள்ளக்கூடிய அந்தஸ்து விருப்பவர்களுக்கு இம்மாதம் வாகனப் பிராப்தி உண்டு. குடும்பத்தில் சிரத்தை அதிகரிக்கும். மனைவியின் பக்கத்து உறவினர்களால் லாபமேற்படும். நிலம் அல்லது வீட்டின் பேரில் பணம்போட நேரலாம் இரண்டாம் பகுதியில் உச்சம்பெற்ற செவ்வாய் 10-வது இடத்தைப்பார்ப்பதால் இலாகாவில் எதிர்பாராத உயர்வு ஏற்படும். வேலை வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாயிருக்கும். சில இனங்

களில் மேலதிகாரியுடன் அபிப்ராயபேதமேற்படவும் கூடும். பரீட்சை முடிவுகளுக்குச் சாதகமான சமயம் அல்லது ஆபீஸில் புதிதாக ஒரு விஷயத்தைப்பற்றி அதிகமாக தகவலைத் தெரிந்துகொள்ளலாம். இரண்டாம் பகுதியில் வியாபாரிகளுக்கு அதிக லாபம். உரிய காலத்தில் உதவியும் அவர்களுக்குக் கிட்டும். எதிர்கால வியாபாரத் திட்டத்தையொட்டிய கடிதப்போக்குவரத்து பயன் தருவதாயிருக்கும். அயல்நாட்டு வியாபாரம் செய்வோருக்கு லாபகரம். இவ்வியாபாரம் செய்யாதவர்களாயின் இதில் ஈடுபடலாம். குதிரைப் பந்தயக்காரர்களுக்கு நிலைமை சுமாராயிருக்கும்.

டிஸம்பர் 21, 25, 28, 31, ஜனவரி 1, 2, 4, 7, 11, தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

இந்த மாத நடப்பில் விருச்சிக ராசிக்காரர்களுக்கு புருஷன் அல்லது மனைவி, வியாபாரத்தில் கூட்டாளி, அல்லது நெருங்கிய சகா இவர்களது பிரச்னைகளைக் குறித்தே முக்கியமாகக் கவனம் செலுத்தும்படியிருக்கும். பண சம்பந்தமான சில சிக்கல்கள் மன நிம்மதியைப் பாதிக்கும். இம்மாத முதல் பகுதியில் செலவு ரொம்ப அதிகம். 10-வது இடத்தில் சனி இருப்பது அதிகமான வேலையிருக்குமென்பதையும், அபிலாஷைகள் பூர்த்தியாவது ஒத்திப் போகுமென்பதையும் குறிக்கிறது. தற்போது வெறும் நம்பிக்கைமட்டும்தான் இருக்குமேயன்றி அது கைகூடாது. இரண்டாம் பகுதியில் பண விஷயத்தில் அனுகூலமேற்படும். உத்தியோக மாறுதலும் அச்சமயத்தில் ஏற்படலாம். டிசம்பர் மாதம் 24-ந் தேதி அதிருஷ்டகரமான தினம். நண்பர்களும், உறவினர்களுமாக இந்த ராசிக்காரர்களின் வீட்டுக்குப் பலர் வந்து போய்க்கொண்டிருப்பார்கள். குழந்தைகளில் ஒருவரின் சாதனையால் ஆச்சர்யப்படும்படியிருக்கும். இரண்டாம் பகுதியில் மனைவி அல்லது புருஷனின் தேக சுகம் பாதிக்கப்படும். நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குடும்ப வட்டாரத்தில் ஏதேனும் அபிவிருத்தி ஏற்படலாம். மனதைப் பொறுத்துள்ள கிரஹமான குரு, புத்திகாரனை புதனுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் மனவேதனையும், அதிகமான ஆயாசமும் ஏற்படலாம். ஜனவரி முதல் வாரத்தில் மேலதிகாரியின் பாராட்டுக்குப் பாத்திரமாகலாம். முதியவர்களானால் ஆத்மீகத் துறையில் தீவிரசிரத்தை கொள்வார்கள் இரண்டாம் பகுதியில் புதியநண்பர்கள் ஏற்படுவார்கள். கூட்டாளியாயிருப்பதாலுள்ள லாபங்களை இந்த கட்டத்தில் அடையலாம். வியாபாரிகளுக்கும் இந்தசமயம் ஏற்றதுதான். வியாபாரத்தைப் பொறுத்துப் புதிய திட்டங்களைப்போட்டு லாபகரமாக அவற்றை நிறைவேற்ற முடியும். கடன் வாங்கக்கூடாது. நரம்புத்துடிப்பினால் தேகாரோக்கியம் திருப்திகரமாகவிராது. ரேஸ் பிரியர்களுக்கு இம்மாதம் ஓரளவு அனுகூலமிருக்கும்.

டிஸம்பர் 22, 27, 31, ஜனவரி 1, 4, 9, 11, 13 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டம்.

தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

இந்த மாதத்திலுள்ள விசேஷங்களெல்லாம் இந்த ராசிக்காரர்களுடையதாகவில்லாமல் இவர்களைச் சுற்றியிருப்பவர்களைப்பற்றியதாகவே இருக்கும். வசிக்கும் வீடு, குழந்தைகள்பற்றிய விவகாரம், காரியாலய அலுவல்கள், சிநேகிதர்கள், அவர்களைப் பற்றிய விஷயங்கள் முதலியவற்றிலெல்லாம் அதிகக் கவலை ஏற்படும். இரண்டாம் பகுதியில் பணத்தைப் பொறுத்த அம்சம் வலுவாயிருக்கும். இம்மாதத்தில் செலவு அதிகம். நண்பர்களில் ஒருவர், தான் கொடுத்த உறுதியை நிறைவேற்றாமல் கைவிட்டுவிடலாம். இன்னொரு நண்பருடன் அபிப்ராயபேதங்கொண்டு பிரிய நேரும். மற்றொரு சிநேகிதருக்கு உதவிபுரிய நேரும். பார்க்கப்போனால் நட்பு விஷயம் திகைப்பையே தரும். எனவே கொஞ்ச காலத்துக்கு நண்பர்களைக் கவனிக்காமல் அவர்கள் போன வழியே விட்டுவிட்டு விலகி நிற்பது நலம்.

லக்னத்தில் 4 கிரஹங்கள் இருப்பது காரணமாக தேகாரோக்கியம் பாதிக்கப்படும். இது உள்ளடங்கிக் கிடந்த வியாதியினால் நேரக்கூடியது. 4-வது இடத்துக்குடைய கிரகம் லக்னத்தில் இருப்பதால் ஏதாவது வாகனப் பிராப்தியை அடைவதற்கு இடமேற்படும். இதில்லையாயின் நிலம் அல்லது வீட்டின்பேரில் பணம் போடும்படியிருக்கும். கொஞ்ச காலத்துக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் கொள்ளலாம். ரேஸ்களிலோ அல்லது வேறு பந்தயங்கள் மூலமாகவோ எதிர்பாராமல் பணம் வர இடமுண்டு. உத்தியோகத்தில் மேற்கொண்டு பொறுப்பை ஏற்க நேரிடும். இது இம்மாதம் இரண்டாம் பகுதியில் சம்பவிக்கும். அதிகாரியாக இருக்கும்பட்சத்தில் சிப்பந்திகளையோ, வேலைக்காரர்களையோ கேவலமாக நடத்தாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் இரண்டாம் பகுதியிலிருந்து போதியகாரணம் எதுவுமில்லாமல் உணர்ச்சி வசப்பட்டு நடக்க நேரிடலாம். குழந்தைகளில் ஒருவருக்காக கடுமையான செலவுகள் செய்யும்படியிருக்கும். இம்மாத இரண்டாம் பகுதி வியாபாரிகளுக்கு நல்லது. கூட்டு முறையில் சற்று மாறுதலேற்படலாம்.

டிஸம்பர் 21, 24, 27, 31, ஜனவரி 1, 2, 3, 6, 9, 11 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

மகரராசிக்காரர்களுக்கு, 8, 12-ல் உள்ள கிரகங்கள் காரணமாக இம்மாதம் எதிர்ப்பில்லாமல் எதையும் செய்யமுடியாது. நடக்கும் சம்பவங்களைக் கண்ணுறும்போது திகைப்பும் எரிச்சலும் ஏற்படும். தொந்திரவுண்டுபண்ணக்கூடிய சகல அம்சங்களும் குறுக்கிடுமே தவிர எதுவும் பலிக்காது. அடிக்கடி மனநிம்மதி பங்கமடையும். முக்கியமாக 3-வது சுற்றிலிருப்பின், 8-வது இடத்தில் இம்மாதம் சனியிருப்பதால் தேகாரோக்

கியம் பாதிக்கப்படும். இரண்டாம் பகுதியில் பண விஷயத்தில் அபிவிருத்தி தென்படும். இதற்கு முன்னிருந்ததையெல்லாம்விடச் செலவு அதிகரித்து நிற்கும். ஏழைகளாயிருந்தால் மேற்கொண்டும் கடன்படுவார்கள். முன்னேற்றத்தை நாடி செய்யும் முயற்சிகளெல்லாம் ஏமாற்றமாகவே முடியும். இரண்டாம் பகுதி வாழ்க்கைத்துறையில் ரொம்ப மோசமாயிருக்கும். மேலதிகாரிகளுடனும், உறவினர்களுடனும் மனஸ்தாபங்களேற்படும். டிஸம்பர் மாதம் 27-ந்தேதியிலிருந்து முதல், 12 வது இடங்களின் கிரஹங்கள் ஓங்குவதால், தற்போதைய வீட்டுக்காரருடன் தீவிர ரச்சரவுகொள்வதன் பயனாக வேறிடம்போக நேரும். பணக்காரர்களாகவிருப்பவர்கள், கார் அல்லது மோட்டார் ஸைக்கிள்களில் பணத்தை செலவிட நேரும். ஜனவரியில் புதிய சிநேகிதர்கள் ஏற்படுவார்கள். ஆனால் இந்த சிநேகங்களெல்லாம் நீடித்து நிலைக்காது. இவர்களில் சிலரோடு தகராறு கூட உண்டாகலாம். குருபுக்தியைப்போல புக்தியும் கெடுதலான தசையும் இருந்தால், உத்தியோகத்தில் ஒரு மாற்றமும் ஏற்படக்கூடும். கூட்டாகவோ, தனியாகவோ புதிய வியாபார முயற்சிகளில் இறங்குவதற்கு இது உகந்த மாதமல்ல. ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட வியாபாரத் தகராறுகளைச் சரிப்படுத்த முயற்சி செய்யலாம். வியாபார நிமித்தம் ஒரு நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ள நேரும். ஏற்கவே எடுத்துக்கொண்ட வியாஜ்ய விவகாரங்களைப்பற்றி தற்காலிகமாக வியாகூலப் படும்படியிருக்கும். தூரத்திலுள்ள உறவினர்களிடமிருந்து முக்கியமான சேதி வரும். ரேஸ் பிரியர்களுக்கு இது நல்லகாலமில்லை.

டிசம்பர் 22, 24, 27, 31, ஜனவரி 1, 2, 7, 11, 13, தேதிகள் இவர்களுக்கு உகந்தவை.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கும்பராசிக்காரர்களுக்கு 11, 10 ஆகிய விடங்களிலுள்ள கிரகங்களின் காரணமாக இம்மாதம் பொதுவாகப் பிரகாசமான நிலைமை ஏற்படும். அதிருஷ்டம் இவர்களுடைய திக்கை நோக்கி அடிக்கும். உத்தியோகம், பணம் முதலிய விஷயங்களில் முன்னிருந்ததைக் காட்டிலும் தரமான வசதிகள் ஏற்படும். இந்தக்கட்டத்திலிருந்து வாழ்க்கையில் திட்டமான முன்னேற்றமேற்படும். 10-வது இடத்தில் சுக்கிரனும், 11-ல் செவ்வாயும் இருப்பது ஓரளவு இந்த ராசிக்காரர்களுடைய அபிலாஷைகள் கைகூட உதவும். இம்மாத இரண்டாம் பகுதியில் வேலை அளவுக்கதிகமாகச் சுமருவதால் மன நிம்மதியில்லாமலிருக்கும். உத்தியோகத்தில் ஏதேனும் அனுகூலமிருக்கும். புதிய சிநேகிதர்கள் ஏற்படுவார்கள். இந்த சிநேகங்களினால் பரஸ்பர நண்மை உண்டு. முதல் பகுதியில் உத்தியோகத்தில் இந்த ராசிக்காரர்கள் திறமை பாராட்டப்பெறும். இம்மாதத்தில் வியாபாரிகள் விசேஷமாக அபிவிருத்தியடைவர். ஊழியரைவிட முதலாளிகளுக்கு விசேஷ வசதியிருக்கும். முதலாளிகள் தங்கள் சிப்பந்திகளிடம் அபிமானத்தோடிருந்து விசேஷ நன்மைகளைப்புரிவர். இரண்டாம் பகுதியைவிட முதல் பகுதியில் வியாபாரத்தில் லாபமுண்டு. இரண்டாம் பகுதியில் செவ்வாய் 12-ல் இருப்பதால் வியாபாரத்தைப்பற்றிய அனவசியக்கவலைகளும், வேதனைகளும் ஏற்படும். இது தவிர செலவு அதிகமாகும். சகோதரர் போலுள்ள உறவினர்களால் ஏதேனும் நஷ்டம் ஏற்படலாம். கடிதப்போக்குவரத்தால் வீணாக வேதனைப்படும் படியிருக்கும். பக்கத்திலிருப்பவர்களிடம் ரொம்ப சீக்கிரமாக எரிந்து விழும்படி நேரும். வியாபார விஷயங்களில் எல்லாவற்றையும் தனக்கு எதிராக முடியும் வகையில் அவசரப்படும்படி ஏற்படும். மனைவியின் தேகாரோக்கியம் திருப்திகரமாயிராது.

டிஸம்பர் 22, 27, 31, ஜனவரி 1, 2, 3, 7, 9, 11 தேதிகள் இவர்களுக்கு உதவிகரம்.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

மீனராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் 10-வது இடத்தில் பாபகிரகங்கள் இருக்கின்றன. 8-வது வீட்டுக்குடைய கிரகம் 9-ல் இருக்கிறது. 12 வது வீட்டுக்குடைய கிரகம் 6-ல் இருக்கிறது, இவையனைத்தும் உத்தியோகத்தைப்பற்றிய கவலைகளையே உண்டாக்கும். தசா, புக்தி சரியாயிருப்பின் இந்த சந்தர்ப்பத்தில் நிலைமையை நன்கு ஸ்தாபித்துக் கொள்ளலாம். கடன் உபாதைகள் தீரும். விரோதிகள் வசப்படுவர். தசா, புக்தி கெடுதலாயிருந்தால் தற்போதுள்ள நிலைமை கஷ்டங்களில்தான் கொண்டு போய் விடும். வியாபாரத்தில் எப்படி முன்னேறுவது என்பதுபற்றி தர்மசங்கடமான நிலைமை ஏற்படும். இந்த நிலைமை தற்காலிகமானதுதான். ஜனவரி மாதத்திலிருந்து ஓரளவு பிரகாசமான காலம் பிறக்கும். பெரிய பணக்காரர்களானால் மேற்படி கிரஹங்களின் அமைப்பு வியாபாரத்தில் பல ஈடுபாடுகளும், முக்கியமாகப் பண விஷயங்களைப் பொறுத்த நடவடிக்கைகளில் சம்பந்தமும் ஏற்படுத்தித் தரும். இதனால் நல்லபெயரும், புகழும் உண்டு. ஜனவரிமுதல் பொதுவாகப் பணவசதி ஏற்படும். ரொம்ப வயது வந்த, தொண்டுகிழமாக விருப்பவர்கள் இந்த சமயத்தில் காலமாகலாம். உத்தியோகத் துறையில் அதிக வேலையும் கவலையும் ஏற்படும். உத்தியோகத்தில் வேலை ரொம்பக் கடுமையென்று உணர்ந்தால் லீவில் போவதற்கு இது தகுந்த காலம். இல்லையானல் வீணாக மனஸ்தாபம் வரும். யாத்திரை, பிரார்த்தனை முதலியவற்றிற்குத் தகுந்த தருணம். டிஸம்பர் 27-ந் தேதியிலிருந்து செவ்வாய் சனியைப் பார்ப்பது தேகாரோக்கியத்துக்கேற்றதல்ல. ஆனால் பண வசதிக்கு உகந்தது. இரண்டாம் பகுதிதான் வியாபாரிகளுக்கு நல்லது. அயல் நாட்டு வியாபாரமும், உள்நாட்டில் வடக்கு, வடகிழக்கு ஆகிய பகுதிகளில் நடத்தும் வியாபாரமும் லாபகரமாயிருக்கும்.

டிஸம்பர் 21, 24, 27, 31, ஜனவரி 1, 3, 7 9, 11, தேதிகள் இவர்களுக்கு திருப்திகரமான தினங்கள்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
5, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

ஓர் இரவு

'ரோஜா'

★

இரவு 11 மணி. குழந்தைகள் எல்லோரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். ஏனோ எனக்கு மட்டும் தூக்கம் பிடிக்கவில்லை. கடந்த நாட்களை எண்ணவாரம்பித்தது மனம். முதலில் நான் இதுவரை இருந்த ஊர்களை எண்ணினேன். 32 ஊர்கள், அங்கு ஏற்பட்ட அனுபவங்கள். ஆஹா! என் மனதில் அதை யெண்ணும்போது எத்தனை வகை யுணர்ச்சிகள்! நவரஸங்களைத் தவிர-திடுக்கிடும், மெய் சிலிர்க்கும், மெய் மறந்த-ஆனந்த சங்கர-நினைவுகள் தோன்றின. தென்னாட்டின் கோடியில் ஒரு சிறு ஊர் எங்கள் ஊர் ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லமாட்டேன். இன்று மாலை பத்திரிகை படிக்கும்போது, என். ஜி.ஓ.க்களைப்பற்றிய விஷயங்கள் கண்ணில் பட்டன. அது என்னை ஒரு கலக்கு கலக்கிவிட்டதென்றே சொல்லவேண்டும்.-ஏனெனில், நான் ஒரு என் ஜி. ஓ உத்தியோகஸ்தரின் மனைவி. என். ஜி ஓ.க்கள்ஸ்டிரைக்கைக் கண்டித்து மேற்படி பத்திரிகையில் எழுதியிருந்தது. "அடிமைக்கடிமையாய் நடத்திய வெள்ளைக்காரர் காலத்தில்" வாய்மூடி, மௌனிகளாய், தாஸானுதாஸர்களாய், அஞ்சி, வணங்கி மேலதிகாரிகளுக்கு அடி பணிந்து, கெஞ்சி ஊழியம் பார்த்த இவர்கள், எத்தனையோ கஷ்டப்பட்டுக் கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்ற தேசத் தலைவர்கள் திணறிக்கொண்டிருக்கும் சமயம், சம்பளம் அதிகம் கேட்பதும், பஞ்சப்படி கேட்பதும் போதாதென்று 'ஸ்டிரைக்' வேறு ஆரம்பித்துவிட்டார்கள்! வெட்கம்! பரிதாபம்!" என்ற தோரணையில் எழுதியிருந்தது. அதைப் பார்த்ததும் என் மனம் பட்டபாடு, அப்பப்பா! "இப்படி நல்லுபதேசம் செய்யும் இவர்கள், பழங்காலக் கணக்குப்படி மூன்றே முக்கால் நாழியாவது ஒரு என். ஜி. ஓ.வாக இருக்க வேண்டும்" என்று சபித்தது மனம்— சிறிது நேரத்தில் தெளிவுற்றது.—

நான் விவாகமாகிப் புக்ககம் வரும்வரை. அம்மான் வீட்டில் வளர்ந்தேன். தாய் தந்தை இல்லை போலும் என்று தீர்மானிக்க வேண்டாம். இன்னமும் தாய் தந்தையர் இருக்கும் பாக்யம் பெற்றவருள் நான் ஒருத்தி—அந்த நாளில் அவிபக்த குடும்பங்கள் அதிகம். பிரிந்து வாழும் வாழ்க்கை இழிவாகக் கருதப்பட்ட காலம். குடும்பங்களில் நஷ்டமோ. லாபமோ எது வந்தாலும், பத்துப் பதினைந்து பேர்களாகப் பகிர்ந்து அனுபவிப்பார்கள். குடும்பத்தில் படித்தபிள்ளை ஒருவன், படிக்காதவன் ஒருவன், சோம்பேறி ஒருவன். காரியவாதி ஒருவன்— இப்படியிருந்தாலும், காரியங்கள் மட்டும் முறைப்படி நடந்துவிடும். ஒருவரை யொருவர் தாழ்த்துவதும், எடை போட்டுப் பார்ப்பதும்—செய்துகொள்ள வசதியிராது. அதே போல மாப்பிள்ளைகளும், மாமனார் வீட்டோடே இருப்பதுமுண்டு. மாமியார் வீட்டிலிருக்கும் மாப்பிள்ளைக்கு, அதிகம் மதிப்பு இராதே என்று நினைக்கலாம். ஆனால், சில வீடுகளில் பிள்ளையைவிட மாப்பிள்ளைக்கு அதிக மதிப்புக் கொடுப்பவரும் உண்டு.

அந்த ரகத்தைச் சேர்ந்தது எங்கள் குடும்பம். எங்கள் தகப்பனாருக்குப் படித்தவர் என்ற பெயராதலால், அவரிடம் கிராமத்தாருக்கு அளவற்ற செல்வாக்கும் மதிப்புமிருந்தது. மாமாவோ காரியவாதி. சுறுசுறுப்பாயிருப்பதில் எறும்புகளும், சிட்டுக்குருவியும்கூட மாமாவிடம் பிச்சை தான் வாங்கவேண்டும். எனக்கு மாப்பிள்ளை தேடும் பொறுப்பை அவரே ஏற்றுக்கொண்டார். தகப்பனாரோ, விச்ராந்தியாக உபநிஷதம் வாசிப்பதிலும், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வீசும் குளிர்ந்த காற்றை அனுபவிப்பதிலும் கழித்தார். எனக்கு வயது பதினாறு நெருங்கிக்கொண்டிருந்தது. எங்கள் அம்மான் வீட்டில் குடும்பத்தவர்கள் பதினைந்து பேருக்கு மேல் உண்டு. சிறிது நிலமும், ஒரு வீடும்தான் அவர்கள் சொத்து. ஓரிருவர்தான் சம்பாத்தியம் செய்யும் துறையிலிருந்தனர். அந்த சமயம் ஜெர்மனி யுத்தம் முடிந்த சமயமாதலால், விலைவாசிகள் எல்லாம்ஏறித்தான் நின்றன. அதே போல மாப்பிள்ளை விலையும் ஏறியே போய்க்கொண்டிருந்தது. தாயாருக்கு பீ ஏ. படித்த மாப்பிள்ளைதான் வேண்டு

மென்ற ஆசை. அதை நிறைவேற்றுவதற்கு ரூ. 400. வேண்டும். என்ன செய்வது? கடைசியாக ஒரு எஸ். எஸ், எல். ஸி. வரன் தான் கிடைத்தது. ஆனால், மற்ற அம்சங்கள் நன்ருயிருந்தன. பையனுக்கு சர்க்கார் உத்யோகம். காயமான வேலை. சிறு பிராயம். நல்ல கட்டுமஸ்தான சரீரம். அவர்கள் வீட்டில் அதிக சம்சாரமில்லை. அதாவது, மாப்பிள்ளை சம்பாதித்துக் கல்யாணம் செய்ய வேண்டிய பெண்களோ, படிக்க வைக்கவேண்டிய பிள்ளைகளோ இல்லை. நான் கிராமத்தில் வளர்ந்த சிறுமியானுலும், கற்பனைக் கனவு காண்பதிலும், நாகரீகப் பைத்தியத்திலும், நகரவாசத்து பெண்களுக்குச் சிறிதுத தாழ்ந்தவளல்ல. எண்ணுததெல்லாம் எண்ணி, எட்டாத கோட்டையெல்லாம் பிடிப்பதில் எனக்கு நிகர் நானே **தான்**.

எங்கள் வீட்டார்தான் அந்தக் கிராமத்தில் நாகரீகத்தின் சின்னமாகக் கருதப்பட்டு வந்தனர். எங்களுக்குப் பாட்டு, படிப்பு, இதர வேலையெல்லாம் கற்றுக் கொடுத்திருந்தனர். அந்தக் கிராமத்தார் ஏறக்குறைய முக்கால் வாசிப்பேர் விலைவாசியின் ஏற்றத்தாலும், உத்தியோக மில்லாமல் இருப்பதைக்கொண்டே வாழ்க்கை நடத்தி வந்ததாலும் வறுமைப் படுகுழியில் விழ்ந்தவர்கள் — அநேகர் வீட்டுச் சமையல்கள் மிகவும் எளியன. பருப்புக் குழம்பைப் பார்த்தே பல நாளாயிருக்கும். குழம்பும் கீரையும் தான் தினமும், என்ன சமையல் வேண்

டிக்கிடக்கு. "கட்டைக் கீரையும், மொட்டைக் குழம்பும்" என்று அலுத்துக்கொள்வார். சில வீடுகளில் அந்தக் கீரையின் ஸ்தானத்தை பருப்புத் துவையல் அலங்கரிக்கும்.

என் கணவருக்குச் சம்பளம் 50. படி 25. மேல் வரும்படி 25 ஆக 100 ரூ. தனிக் குடித்தனம். மாமியார் இல்லை. பார்க்காத ஊரெல்லாம்பார்க்கலாம். காணுத காட்சியெல்லாம் காணலாம். அவரோ கட்டு மெட்டாக இருப்பவர். செட்டாக விருந்து பணம் மிச்சம் பிடிக்கலாம்; அப்புறம் மாடி வீடு கட்டலாம் என்றெல்லாம் மனக்கோட்டைகள் ஒவ்வொன்ருய் எழும்பும்.

ஆந்திர ஜில்லாவில் ஒருஊருக்கு அழைத்துச் சென்ருர் கணவர். குடித்தனம் செய்ய ஊர் புதிது. பேச்சுப்புதிது. ஜனங்கள் புதியவர்கள் அவர்கள் நடை, உடை, பாவனை எல்லாம்புதியன. "இதென்ன எல்லாரும் தலையில் "சும்மாடு" வைத்திருக்கிருர்களே" என்று கேட்டேன் கணவரிடம். அவர் சிரித்து, "அது சும்மாடு இல்லை; தலைப்பாகை" என்று கூறினுர். ரயில் ஸ்டேஷனிலிருந்துவண்டியிலேறியவுடன் இப்போது யார் வீட்டிற்குப் போகவேண்டும்" என்று வினவினேன், "சத்திரத்திற்கு" என்ருர். என் மனம் அதைக் கேட்டுத் திடுக்கிட்டபோதிலும், வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. சத்திரத்தில் ஒரு உள் வாடகைக்கு எடுத்தோம் அடுத்தது சமையல் பிரச்னை. ஜல பிரச்னை. பெரிய காரியம் சாதிப்பவர்களை பகீரதனுக்கு ஒப்பிடுவதுண்டு. பகீரதனுக நாம் ஆனுல்தான் அந்த ஊரில் தண்ணீரைக் காண முடியும். தேர்வடம் போன்ற கயிறு. மந்தர கிரி போன்ற குடம். அரை மணி நேரம் நாம் அவற்றுடன் போராடினுல், குடம் அமிர்த கலசம் தோன்றுவதைப் போல் வெளிவரும். மிளகாய் ஏராளமாக அகப்படும். ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்தோம். மிளகாய் சட்னி, மிளகாய் தொக்கு. மிளகாய் வற்றல், மிளகாய் பஜ்ஜி, மிளகாய் ரஸம். இந்த விதமாக எனது குடித்தன ஆரம்ப விழா காரசாரத்தோடு ஆரம்பித்தது.

கதையை வளர்த்துவதில் பயன் என்ன? நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்று. வாழ்க்கையை இன்பப்

பூங்காவாக எதிர்பார்த்த எனக்கு. "பாலைவனம்" தான் லபித்தது. எங்கள் வீட்டுக்காரருக்கு ஸர்க்கார் உத்யோகம். சொல்லிக் கொள்ளப் பெருமை தான். வீடு நிறைய குழந்தைகள்! இன்னமும் என் கணவர் நூறு ரூபாய் சம்பளத்தை எட்டிப் பிடிக்கவில்லை. "சம்சாரமோ சாகரமோ" என்ற மொழிகளின் பொருள் விளங்கியது. மாடுபோல் நாங்கள் இருவரும் (அவர் ஆபீஸிலும், நான் வீட்டிலும்) உழைத்தோம். பணக்காரர் கண்களுக்கு

பஸ் சார்ஜ்!



''என்னப்பா, மைலாப்பூருக்கு ஒரு ரூபா போதுமா! இல்லை இன்னும் சில்லரை எதினாச்சும் வேணுமா!.....!''

நாங்கள் கேலிப்பொருள்களாய் விளங்கினோம்.'

சினிமாக் கொட்டகையில் இரண்டாம் ஷோ முடிந்து விட்டது போலும்! "ஏழையென்றும், அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்" என்று கிராமபோன் பாடுகிறது. தெய்வப் புலவர் வாக்கு பலிக்கும் என்று யாரோ சொல்வது காதில் விழுகிறது. இரவும் கழிந்தது.



மணிக்கு 120-மைல்! ஸ்போர்ட்ஸ் மாடல் காரான இதன் பெயர் ''ஜாகர்''. இரண்டுபேர் உட்காரக்கூடியது. 33-வது சர்வதேச மோட்டார் காட்சியில் இது வைக்கப்பட்டிருந்தது. லண்டனில் சமீபத்தில் நடந்த இக்காட்சியில் இருந்த இக்காரை ஒரு அமெரிக்கர் பார்த்தார். இது உற்பத்தியான கம்பெனியையே வாங்க அவர் தயார். ஆனல் பிரிட்டிஷ் உற்பத்திக்காரர் மறுத்துவிட்டாராம்.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப்பூங்கோயிலில்

பி. ஸ்ரீ.



31

நக்கீர தேவர் போற்றிய நால்வர்

மாடு மேய்த்த மறைக்கன்று.

★

'போதும்' போதும் நீ மாடு மேய்த்தது! இனி இந்த மந்தையை நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று பிரம்மசாரி சொன்னதும் மேய்ப்பவன் பயந்து கும்பிடு போட்டுக்கொண்டே போய்விட்டான். 'ஏன் அப்படிக் கொஞ்சமும் கூசாமல் அந்தப் பசுவைக் கோல்கொண்டு அடிக்கிறான்?' என்று பதை பதைத்துத்தான் இந்தப் பிரம்மசாரி தாமே அந்தப் பசுக்களையெல்லாம் மேய்க்க ஆரம்பித்தார். வேத அத்யயனம் செய்ய வேண்டிய பிரம்மசாரி மாடுமேய்க்கும் தொழிலை மேற்கொண்டார். ஆற்றங்கரையிலுள்ள காடுகளிலும், வயலோரங்களிலும் புல் நிறைந்த இடங்களில் பசுக்களை மேயவிட்டுத் தண்ணீர் காட்டி, வெயில் எரிக்கும்போது நிழல் இருக்கும் இடங்களிலே செலுத்துவார். தம்முடைய அன்பினால் பசுமாடுகளின் அச்சம் போக்கிப் பரிபாலித்து வந்தார். பசுக்கள் அழகாய் வளர்ந்து அதிகமாய்ப் பால் கொடுத்தன. ஊர்க்காரரின் சந்தோஷத்தைச் சொல்லவா வேண்டும்? ஊராரைக்காட்டிலும் அதிக மகிழ்ச்சி பசுக்களுக்கு!

யார் இந்தப் பிரம்மசாரி? இவரை "மறைக் கன்று" (அதாவது வேதத்திற்கு உரிய கன்று; இளம்பிள்ளை) என்கிறார் சேக்கிழார். எச்ச தத்தன் என்ற பிராம்மணரின் புதல்வர் இவர்; விசார சர்மா என்று பெயர். இவர் உண்மையில் ஓதி உணர்ந்ததில்லையாம்; ஓதாமல் உணர்ந்தவராம். ஆசிரியர் போதிப்பதற்கு முன்னமே அவர்கள் போதிக்க வந்த வேதாகமப் பொருள்களை உணர்ந்து கொண்டாரென்றும், பூவில் மணம்போல் அந்த உள்ளத்தில் பூத்திருந்த புத்தியின் திறம் கண்டு ஆசிரியர்களே அதிசயித்தனரென்றும், கதை சொல்லுகிறது. கலைகளின் பொருளுக்கெல்லாம் எல்லை, ஆடும் தெய்வமாகிய நடராஜப் பெருமானின் திருவடி அல்லது திருவருள்தான் என்ற ஞானத் தெளிவும் ஏற்பட்டிருந்ததாம் இச் சிறுவருக்கு. இத்தகைய உள்ளத்தில் அருளாளரான நடராஜா மீது மேலும் மேலும் பெருகி வளர்ந்த அன்பே ஜீவகாருண்ய உணர்ச்சியாகவும் தழைத்தது. இந்த உணர்ச்சிதான் பசுக்களுக்காக இரங்கி மாடு மேய்க்கும் தொழிலையும் மறை ஓதும் வயதில் மேற்கொள்ளும்படி இந்தப் பார்ப்பனச் சிறுவரைத் தூண்டியது.

பசுக்கள் கன்றுகளைப் பிரிந்திருந்தாலும் வேதக்கன்று ஆகிய இந்தப் பிரம்மசாரியைப் பிரிய முடியாமல் தாய்போல் உருகிக் கனைத்து நிற்குமாம். கறக்காமலே மடி சுரந்து தாமே பால் பொழியுமென்று புராணம் சொல்லுகிறது. அப்படிப் பொழியும் பாலைப் பசுபதியான சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்யலாமென்று தோன்றியது சிறுவருக்கு. உடனே ஆற்றங்கரையில் மணலால் ஒரு சிவலிங்கம் குவித்து வைத்தார்; கோவிலும் கோபுரம் மதிலும் அமைத்தார்:

> **செங்கண் விடையார்**
> **திருமேனி மணலால்**
> **ஆக்கிச் சிவாலயமும்**
> **துங்கநீடு கோபுரமும்**
> **சுற்று லயமும்**
> **வகுத்(து) அமைத்தார்.**

[செங்கண் விடையார்—ரிஷபாரூடரான சிவபெருமான். சுற்று ஆலயம்-மதில்.]

அர்ச்சனை, அபிஷேகம் முதலியவை ஒழுங்காக நடந்தன. அபிஷேகத்தின் பொருட்டுக் குடங்கள் நிறையப் பாலைச் சொரிந்தபோதிலும் அந்தக் கறவைப் பசுக்கள் வீடுகளிலும் பால் கொடுத்து வந்தனவாம். இப்படிப் பல தினங்கள் கழிந்தன.

'அன்போடு பசுக்களை மேய்ப்பவனைப்போல் பாலை விருதாவாக மணலிலே சொரிந்து விளையாடுகிறான் சிறுவன்' என்ற செய்தி தந்தை காதில் விழுந்தது. எச்ச தத்தர் கோபத்துடன் சிறுவர் முதுகிலே பளீர் பளீரென்று ஒரு

கோலால் அடித்தார்; வசைமொழிகளும் சொன்னர். ஆனல்,

தொண்டு புரியும் சிறியபெருந்
தோன்றலார், தம் பெருமான் மேல்
மண்டு காதல் அருச்சனையின்
வைத்தார், மற்றென்(று) அறிந்திலரால்!

[தோன்றலார்—மகனர். மண்டு—மிகுதியாய் ஈடுபடுகிற.]

எல்லையில்லாத இன்ப அன்பிலே தம்மை மறந்து சிவபூஜையில் ஈடுபட்டிருந்த விசார சருமருக்கு அடிவிழுந்ததே தெரியவில்லை. வசை மொழிகளும் காதில் விழவே இல்லை. பூஜையையும் அபிஷேகத்தையும் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கவே தந்தையார் கோபமும் எல்லையில்லாமல் பொங்கிவிட்டது. அபிஷேகத்திற்கு வைத்திருந்த பாற்குடத்தையே காலால் உதைத்துக் கொட்டிவிட்டார். 'ஆஹா, பூஜைக்கு இடையூறு வந்துவிட்டதே!' என்ற உணர்ச்சி மகனரைப் புற உலகத்திற்குக் கொண்டுவந்து விட்டது. குற்றவாளி தந்தையார் என்பதும் தெரிந்துவிட்டது. ஆனல் குற்றம் பரம பிதாவுக்கு விரோதமாகச் செய்யப்பட்டதல்லவா? உடனே அந்தக்கால்களை வெட்டி எறிந்தாராம் சிவாதீனமாயிருந்த சிறுவர். இடையூறு நீங்கியதென்று மறுபடியும் சிவபூஜையில் ஈடுபட்டார். ஆனல் அதற்குள் சிவபெருமான் தேவியாரோடு ரிஷபாரூடராய்ப்பிரத்தியட்சமாகி விட்டாராம்.

'குழந்தாய்! நம்மையே உயிருக்கு உறவாகக்கொண்டு பெற்ற பிதாவையும் துறக்கத் துணிந்தாய்! இனி நீ நம் குழந்தை!' என்று சிவபெருமான் விசாரசருமரின் அற்புதமான மன உறுதியையும், மெய்யன்பையும் பாராட்டினராம். இந்த அருளால் இச்சிறுவர், தொண்டர்களுக்கெல்லாம் அதிபதியான சண்டேசுரபதத்தில் அமர்ந்து விட்டாராம். இப்பேர்ப்பட்ட பிள்ளையின் பெருமையால் தந்தையாருக்கும் நல்ல கதி கிடைத்துவிட்டதாம்.

'சண்டேசுர நாயனர் புராணம்' என்ற இந்தக் கதை சைவசமயத்தின் அடிப்படையான உண்மை ஒன்றை வெளியிடுகிறது. இந்த உண்மையை,

இந்த நிலைமை அறிந்தார் ஆர்?
ஈறி லாதார் தமக்(கு) அன்பு
தந்த அடியார் செய்தனவே
தவமாம் அன்ருே, சாற்றுங்கால்?

[ஈறு இலாதார்—முடிவு இல்லாத சிவபெருமான். சாற்றுங்கால்-சொல்லும் இடத்து.]

என்ற சேக்கிழார் சுவாமிகள் வாக்கிலே காணலாம்.

சித்தம் சிவமாகும்போது' செய்வதெல்லாம் தவமாகும் என்பது குறிப்பு. விசாரசர்மர் என்ற இந்த இளைஞர் சிவபெருமான்மீது கொண்ட அதி அற்புதமான மெய்யன்பே இவருடைய சித்தத்தைச் சிவமாக்கியது. ஜீவகாருண்யத்தோடு செய்த பசு பரிபாலனமும் சிவபெருமான் மீதுள்ள அன்பை மேலும் மேலும் தூண்டி மெய்யன்பாக ஜொலிக்கச் செய்திருக்க வேண்டும். இவர் செய்த பூஜை சிவபெருமானுக்கு உவப்பாயிருந்ததுபோல், அன்போடு மாடு மேய்த்ததும் உயிருக்குயிரான் அந்தப் பெருமானுக்கு உவப்பாயிற்று. இந்த இளைஞரை அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான சண்டேசுர நாயனர் என்று சைவ உலகம் போற்றுகிறது.

சண்டேசுரர் சிவபூஜையின் இறுதியிலே பூஜிக்கப்படுகிருர். இவர் பூஜிக்கப்படாவிட்டால் சிவபூஜையால் பயன் இல்லையாம். சைவத்தை நிலை நாட்டிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் என்ற சமயாசாரியர் நால்வரும் சண்டேசுரர் பெருமையைக் குறிப்பிடுகிருர்கள். அத்வைதம் என்ற பிரசித்தமான வேதாந்த மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீ சங்கராசாரியரும் தாம் இயற்றிய வடமொழி நூல் ஒன்றில் சண்டேசுர நாயனரைத் துதித்திருக்கிருர்.

சண்டேசுரர் கதை கண்ணப்ப தேவர் மறம் பாடிய நக்கீரதேவ நாயனருக்கும் தெரிந்திருந்தது. காளத்தி வேடரைப்போல் மாடு மேய்த்த மறைக்கன்றும் நக்கீர தேவருக்குப் பக்தியுலகத்தில் ஒரு வழிகாட்டியாக உதவியதென்று கருதலாம். அங்கே காட்டு மிருகங்களை வேட்டையாடி வந்தவர் சித்தம் சிவமாகி ஆசையெல்லாம் துறந்த அதிவீரரானர். இங்கே சண்டேசுரர் சித்தம் சிவமாகப் பெற்றுப் பிதாவையும் பரமபிதாவுக்காகத் துறக்கத்துணிந்த அதிவீரரானர்.

2 கல் எறிந்த கடவுள்-அன்பு

சண்டேசுரர் கதையைப்போல் சாக்கியநாயனர் கதையும் நக்கீரதேவரால் பாராட்டப்பெற்றிருக்கிறது. சிவபூஜைக்கு இடையூருகத் தோன்றிய தந்தையின் உறவையும் அறுத்துக்கொண்டார். சண்டேசுரர் என்ருல் சிவலிங்கத்தின் மீது கல் எறிவதையே சிவபூஜையாகக்கொண்டார் சாக்கியநாயனர்: இவர் பௌத்தராயிருந்து சிவபக்தரானதால், சாக்கியநாயனர் என்று பெயர் பெற்ருர். பௌத்த சமயாசாரியரானபுத்தர் பெருமானுக்குக் கௌதமசாக்கியர் என்ற ஒரு பெயரும் உண்டு. எனவே பௌத்தரைச் சாக்கியரென்றும் கூறுவதுண்டு. சிவபக்தரான பின்பும் சாக்கியநாயனர் பௌத்த வேஷத்தை விடவில்லை.

எந்நிலையில் நின்ருலும்,
எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள்
மறவாமை பொருள்என்றே,

கருதிய இச்சாக்கியர் சிவபெருமானைப் பூஜிப்பதற்கும் ஓர் அதிசயமான புதிய முறையைக் கண்டுபிடித்தாராம். ஒரு சமயம் ஒரு சிவலிங்கத்தைக் கண்டதும் தோன்றிய ஆனந்த வெறியிலே 'இன்னது செய்கிருேம்' என்று அறியாதவராய்ப் பக்கத்தில் கிடந்த ஒரு கல்லையே தூக்கி எறிந்துவிட்டாராம் லிங்கத்தின் மீது. அவ்வளவு ! பிரியம், அவ்வளவு பைத்தியம்! அன்றுமுதல் அப்படிச் செய்வதையே சிவவழிபாடாகக் கருதினர், பூவைப் போட்ட மன்மதனை நெற்றிக்கண்ணல் எரித்த பெருமான் கல் எறிந்த சாக்கியரை அருட்கண்ணல் நோக்கினராம், அங்கே பக்தி இல்லை: இங்கே சாக்கியர் பக்திவலையை விரித்திருந்தார். 'இந்தப் பக்திவலையில் அகப்பட்டுக் கொள்ளவேணுமே!' என்று தான் சிவபெருமான் அகப்பட்டுக் கொண்டாராம்.

'வேஷம் எப்படியிருந்தாலும் பாதகம் இல்லை' என்ற உண்மையுடன் இக்கதையும் சித்தம்

சிவமாகச் செய்வதெலாம் தவமாகும்' என்ற உண்மையையும் நன்றாக வெளியிடுகிறது.

3. 'சிலந்திக்குச் செய்த சிறப்பு'

இக்கதைகளைத் தவிர ஒரு சிலந்தியும் பக்தி நெறியிலே நக்கீரதேவருக்கு வழி காட்டியதென்றால், அதிசயமாகத் தோன்றுகிறதல்லவா? பக்தியுலகம் அதிசய உலகம்! ஒரு சோலையில் மரத்தின் கீழே இருந்த சிவலிங்கத்திற்கு வெள்ளையானையொன்று தன் துதிக்கையால் நீர் முகத்துவந்து அபிஷேகம் செய்து வழிபட்டு வந்ததாம். இந்தச் சோலையைத்தான் திருவானைக்கா என்கிறார்கள். இதே சிவலிங்கத்தின்மேல் சருகு உதிராதபடி ஒரு சிலந்தி தன் வாய் நூலினாலேயே மேற்கட்டி அமைந்ததாம். அந்த வலையைச் சிதைத்து, இடத்தைச் சுத்தமாக்கி வைத்தது வெள்ளையானை, யானை செய்தது சிவ நிந்தையென்று கருதிய சிலந்தி, அதன் துதிக்கைக்குள்ளே புகுந்து கடித்தது. விஷச் சிலந்தியானதால் யானை நிலத்திலே விழுந்து இறந்தது துதிக்கையை மோதிக்கொண்டு. அந்த மோதலில் சிலந்தியும் அடிப்பட்டு இறந்து போயிற்று.

வெள்ளையானை கைலாசம் சேர, சிலந்தி கோச்செங்கட் சோழன் என்ற அரசனாகப் பிறந்ததாம். இந்த அரசன் சிவபக்தியில் முதிர்ந்து சிவாலயங்கள் பல கட்டித் திருவானைக்காவிலும் ஒரு கோவில் அமைத்தானென்றும், சிதம்பரத்துச் சிவ பக்தர்களுக்கு மாளிகைகள் கட்டிக்கொடுத்துச் சிவநெறியைப் பலவகையிலும் தழைக்கச் செய்தானென்றும் பெரிய புராணம் சொல்கிறது.

இவனுடைய வீரத்தையும் வெற்றியையும் 'களவழி நாற்பது' பாடிய பொய்கையார் என்ற புலவரும் பாராட்டியிருக்கிறார். திருமங்கையாழ்வாரும் பாராட்டியிருக்கிறார். இந்த அரசன் 'கோச்செங்கட் சோழ நாயனார்' என்று அறுபத்து மூன்று நாயனாரில் வைத்து எண்ணப்படுகிறான்.

இம் மன்னன் சரித்திர புருஷன் என்பதில் சந்தேகமே இல்லை— தமிழ் நாட்டின் பழைய பெரிய வீரமன்னர்களில் ஒருவன்.

சிலந்தி ஒன்று ஓர் அரசனாகப் பிறந்தது என்ற கதையை நக்கீரதேவரும் நம்புகிறார்.

சிலந்திக்குச் செய்த சிறப்பு
என்று பாடுகிறார்.

சீர்மலி சிலந்திக்(கு)

இன்னரசு அளித்தும் என்றும் பாடியிருக்கிறார். இக்கதையும் சிவபெருமானுடைய அருளுக்கு ஒரு விசேஷமான சாட்சி என்பது நக்கீரதேவர் கருத்து. சண்டேசுரருக்கும், சாக்கியருக்கும், கண்ணப்பருக்கும் கதியளித்த திருவருள் எந்த அற்பமான கைங்கரியத்தையும் அங்கீகரிக்கும் என்பதும், எவ்வளவு தாழ்ந்த பிராணியையும் கைவிடுவதில்லையென்பதும் சிலந்திக் கதையின் சிறப்பான உட்பொருள்.

ஆம், நக்கீரதேவர் பாராட்டிய நால்வருள் சிலந்தியும் ஒன்று, சண்டேசுரரும், சாக்கியரும் கண்ணப்பரும்போல் சிலந்திக் கதையும் நக்கீரதேவருக்குச் சித்தம் சிவமாக உதவியதென்று கருதலாம்.

குழந்தைக்குக் குழந்தை !

ஆண் மகவை ஈன்றிருக்கும் பிரிட்டிஷ் இளவரசி எலிஸபெத்தைக் குழந்தைப்பருவத்தில் எடுத்த படம். 1929-ம் ஆண்டில் ஸ்காட்லண்டில் எடுத்த படமிது.

ஸ்ரீமான் வேங்கிடசுப்பையர் சங்கரி அம்மாளிடம் தான் நாக்பூர் போய்வந்த விருத்தாந்தங்களைப்பற்றித் தனிமையில் பேசிக்கொண்டிருந்தார்.

"வெள்ளிக்கிழமை பாக்கு வெற்றிலை வாங்கியாகிவிட்டது. முகூர்த்தம் வைத்து லெட்டர் எழுதுவதாய்ச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். மாப்பிள்ளை கோபிநாத் ஒரு மாத லீவில் வந்திருக்கிறார். கல்யாணத்திற்கு இருந்துவிட்டுப் போவார். காந்திமதிக்குக் கிடைத்திருக்கும் இடம் மிக உயர்ந்தது. தகப்பனார் இஞ்சினீயர். பையன் இஞ்சினீயருக்கு வாசிக்கிறான். இன்னும் இரண்டு வருஷத்தில் படிப்பு முடிந்துவிடும். நல்ல லட்சணமாயிருக்கிறான். படிப்பில் சூரன். எல்லாப் பரீட்சைகளிலும் இதுவரை முதல் வரிசையில்தான் தேறி வந்திருக்கிறான். பெண்ணைப் பார்க்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு இப்போது வர சௌகரியப்படவில்லை. முகூர்த்தம் ஒரு மாதத்திற்குள் பார்க்கும்படி சொல்லியிருக்கிறார்கள். பாக்கு வெற்றிலை வாங்கும்போது ஐயாயிர ரூபாய்க்கு ஒரு செக் எழுதிக் கொடுத்தேன். அதை சம்பந்தி வாங்கமாட்டேனென்று பிடிவாதம் செய்தார். 'என் பிள்ளைக்குக் கல்யாணமென்றால் எனக்குச்செலவுவேண்டாமா! உங்களிடம் ஏன் நான் வாங்கிச் செலவு செய்ய வேண்டும்! உங்கள் பெண்ணுக்கு நீங்கள் உங்கள் இஷ்டப்படி எது வேண்டுமானாலும் சீர் முதலியன செய்யுங்கள். அது விஷயத்திலும் நான் ஒன்றும்சொல்லப் போவதில்லை! என்று கூறிவிட்டார். அவர் பணவிஷயத்தில் பேராசை பிடித்தவர் என்று சிலர் என்னைப்பயமுறுத்தினார்கள்.

★

அது விஷமிகளின் பேச்சு. உண்மையில் மனுஷ்யர் மிகவும் உயர்ந்த சுபாவமுடையவர். நமக்குத் தகுந்த சம்பந்தம்."

"அவர் கேட்காததற்காக நாம் செய்ய வேண்டியதைச் செய்யாமலிருக்கப் போகிறோமா? நம் ஆசைக்கு நாம் செய்கிறோம்" என்றாள் சங்கரி.

"இதை அறிந்து எவ்வளவு பேர்கள் பெருந்தன்மையாய் இருக்கிறார்கள்? காக்கை, கழுகுபோல் பிடுங்கித் தின்னும் பிணாதிகளை சம்பந்திகளாய் அடைந்து பெண்ணைப் பெற்றவர்கள் உலகத்தில் எவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்களுக்கு உள்ளாகிறார்கள்—" என்று வேங்கிட சுப்பையர் உபன்யஸித்தார்.

பின்பு செல்லத்தின் கல்யாணம் நிச்சயமாகாததைப்பற்றி இருவரும் பேசிக் கொண்டார்கள்.

"சிவராமன் அதற்காகத்தான் மறுபடி வந்திருக்கிறானோ?" என்று கேட்டார் வேங்கிட சுப்பைய்யர்.

சங்கரி அம்மாள் சிவராமன் வந்த காரியத்தை விளக்கிக் கூறினாள். நரஸிம்ம ராஜபுரம், தனலக்ஷ்மி, உஷா, அழகிரி எல்லாப் பிரஸ்தாபங்களும் வந்தன. வேங்கிட சுப்பையர் ஆச்சரியத்துடன் விஷயங்களைக் கேட்டுக்கொண்டார்.

"ஜீவனாம்ச விவஹாரம் முடிவு பெற்றதா இல்லையா."

"என்னமோ தகராறில்தானிருக்கிறதுபோலிருக்கிறது. வக்கீல் வீட்டிற்குப் போய் விட்டு ஒன்றும் முடிவாகாமல் திரும்பி வந்து ராத்திரி எல்லாம் மாமாவும், மருமானும் தடாபுடாவென்று மாடியில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள்."

இதிலிருந்து ராமநாதன் கதையை சங்கரி எடுத்துக்கொண்டாள். உஷாவிடம் ராமநாதன் காதல் கொண்டு தரிதலைத்தனமாய் தாறுமாறான கக்ஷிகள் பேசிக்கொண்டு திரிவதைப்பற்றியும், போலீஸில் அவன் மாட்டிக்கொண்டு ஏதோ ஸ்டேட்மெண்டு எழுதி வைத்துவிட்டு மாமாவுடன் வீடு வந்து சேர்ந்ததைப்பற்றியும் சங்கரி பிரஸ்தாபித்தாள்.

உஷாவும், பத்மாவும் அழகிரியுடன் ஆத்துக்கு வந்ததையும் இன்னும் மற்ற வரலாறுகளையும் தெரிவித்தாள். உஷாவைப்பற்றித் தனக்குத் தோன்றினதையும் கூறினாள்.

"அந்த இடத்தில் தப்பிப் பிறந்துவிட்டாள். பெண் ரொம்ப அடக்கம். சமத்து. உயரிய குணம். அழகில் அப்ஸரஸ்ஸு—தான். ஸங்கீதத்திலும், நாட்டியத்திலும் மிகத்தேர்ச்சி பெற்றிருக்கிறாள் என்று சொல்லுகிறார்கள். அந்தப்பெண்ணைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாகவிருக்கிறது."

சங்கரி அந்த அந்தவிஷயத்தைப் பற்றித் தனக்குத் தெரிந்த அளவு எடுத்துச்சொன்னாளே ஒழியத் தொடர்பாகவோ, தீர்மானமாகவோ எல்லாவற்றையும் அவளால் கூறமுடியவில்லை. வேங்கிட சுப்பையர் அவள் சொன்னவற்றை எல்லாம் மனதில் வாங்கிக்கொண்டார். தன் உணர்ச்சிகளை வெளி

யிடும் வார்த்தைகளைப் பேச வில்லை.

சிவராமனைக் கேட்டால் எல்லாம் காலோடு தலை கோர்வையாய்த் தெரிந்துகொள்ளலாம் என்றாலும் அவர் சிவராமன் அல்லாமலே தன் விசாரணைகளை நடத்திக்கொள்ளத் தீர்மானித்தார்.

செல்லத்திற்கும்காந்திமதியுடன் சேர்த்து விவாஹத்தை நடத்தி விடவேண்டுமென்றும், சிவராமன் தன் மதிப்புள்ளவனாகையால் அப்படி வெளிப்படையாகத் தன் விருப்பத்தை அறிவிக்காவிட்டாலும் அவனுடைய தற்கால ஸ்திதியில் தனியே விவாஹத்தை நிர்வகிக்க அவனால் சாத்தியமில்லை என்றும் சங்கரியும் வேங்கிடசுப்பையரும் ஒரே மனோபாவத்தை வெளியிட்டார்கள். செல்லத்திற்கு வரன் தேட அவன் யாதொருபிரயத்தனமும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதுபற்றி வேங்கிடசுப்பைய்யர் வருத்தப் பட்டார். ராமனாதனுக்குச் செல்லத்தைப் பண்ணிக்கொள்ள வில்லை என்று தன்னைக் குறைகூற அவனுக்கு இடமில்லாமல் போனதைக் குறிப்பிட்டார். ஆனால் மற்றொரு விதத்தில் ராமநாதன் சிவராமனுக்கு மாப்பிள்ளையாகவே ஆக நினைப்பது குறும்புத்தனமான தெய்வத்தின் திருவிளையாட்டு என்று வியந்துகொண்டார்.

சங்கரி, செல்லம் தனக்கு வரனைத்தானே தேர்ந்தெடுத்திருப்பதாயும், அவள் படிக்கும் பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் மூலம் அந்த வரனை திட்டம் செய்யலாமென்றும் காந்திமதியின் சில வார்த்தைகளிலிருந்து தெரிய வருவதாய் தெரிவித்தாள்.

வேங்கிடசுப்பையர் சிறு குழந்தைகளானாலும இளம் கன்றுகளைப்போல் பலமாகக் குடும்ப சகடத்தை வெவ்வேறுபக்கம் இழுத்து ஓட்டுபவனுக்குத் தொல்லை கொடுக்க அவர்களுக்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது!'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

* * * * * *

மறுநாள் திங்கட்கிழமை காலையில் வேங்கிடசுப்பையர் ஆபீஸுக்குப் போகும் வழியில் வக்கில் விச்வநாதைய்யரைப் பார்த்துப் பேசினார். அவரிடமிருந்து சிவராமனுக்கும் அழகிரிக்கும் நடந்த பேச்சுவார்த்தைகளையும், கார்டியன் பிரஸ்தாபத்தில் தோன்றிய சிக்கல்களையும் அறிந்துகொண்டார். உஷாவை ரிஜிஸ்டர் விவாஹம் செய்துகொள்வதில் ராமநாதனின் மன உறுதியையும் வக்கில் சொல்லக் கேட்டுக்கொண்டார். மேலும் அழகிரி ராமநாதனுக்கு ரூபாய் ஆயிரத்திற்கு ஒரு செக் கொடுத்திருப்பதைப் பிரஸ்தாபித்து வைரப்பித்தான் பறி முதலில் ஆரம்பித்து போர்ஜரி செக்கில் உச்சநிலையடைந்து மாயப் பொன் மான் போன்ற அந்த செக்கை இறுதிக்காக்ஷியாகக் கொண்டிருக்கும் விந்தையான சரித்திரத்தை வக்கீல் விசுவநாதய்யர், வெகு சுவாரஸ்யமாய் வேங்கிட சுப்பையருக்கு வருணித்தார்.

முடிவாக அவர் கூறியதாவது: “மின்சார சக்திமூன்று நுனிகளில் இப்போது கனமாகத்தங்கி பளிர் என்று ஜ்வலிக்கக் காத்துக்கொண்டிருக்கிறது. சிவராமன் கார்டியன் மனுப்போடவும், அழகிரி ஜீவனாம்ச வியாஜ்யம் தொடரவும், ராமநாதன் மாஜிஸ்டிரேட்டிடம் கம்ப்ளயிண்டு கொடுக்கவும் ஸஜ்ஜமாகவிருக்கிறார்கள்’!

“நாலாவது நுனியை மறந்துவிட்டீர்களே! போர்ஜரி செக்கினால் பாங்கை மோசம் செய்து பணத்தைத் திருடியதற்குப் பரிகாரம் தேட வேண்டியவரை நாலாவது மின்சாரத்தேக்கமாய்க் கணக்குப் பண்ணுங்கள்'' என்றார் வேங்கிடசுப்பையர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வேங்கிட சுப்பையர் அங்கிருந்து புறப்பட்டு பாங்கிற்குச் சென்றார். ராமநாதன் போலீஸில் கொடுத்த ஸ்டேட்மெண்டை ஏஜெண்டிட



மிருந்து பெற்றுக்கொண்டார். அப்போது மணி சாஸ்திரி என்பவர் சியாமளாம்பாபுரத்திலிருந்து டிராப்டு மூலம் ரூபாய் ஆயிரம் வேங்கிட சுப்பையர் கணக்கிற்கு அனுப்பியிருந்ததை ஏஜெண்டு சொல்ல அவர் கேட்டு மிக வருத்தமடைந்தார். ஸீதாராமனை நினைத்துப் பெருமூச்சு விட்டார். ஒருவன் வழிதவறிப் போக எவ்வளவுபேர்களைச் சந்தியில் கட்டி அவன் இழுக்கிருன் என்று நினைத்து அவர் வெறுப்புற்ருர். ஸீதாராமனுக்குச் சமாதானக் கடிதம் எழுதுவதா? மணிக்குப் பணத்தைத் திருப்பி அனுப்புவதா? என்று ஆலோசித்தார். முதலில் நெருக்கடியாயுள்ள சொந்தச் சிக்கல்களை நிவர்த்தி செய்துகொண்டு பிறகு ஸீதாராமனுக்கு ஈடு செய்வது என்று தீர்மானித்துக் கொண்டு தன் ஆபீஸை அடைந்தார்.

வேங்கிட சுப்பையருக்கு அன்று ஆபீஸ் வேலையில் மனம் அதிகம் நாடவில்லை.

தன் கிளாஸ்மேட்டும் பிரபல வக்கீலுமான முகுந்தராஜ அய்யங்காரிடம் கலந்தாலோசிக்க விருப்பம்கொண்டு கோர்ட்டு லஞ்சுடயத்தில் ஹைகோர்ட்டுக்குச் சென்று மேற்படி அய்யங்காரை அவர் சேம்பரில் சந்தித்தார்.

ஒருமணி நேரத்தில் மேல் நடக்க வேண்டியதற்கு திட்டமான தீர்மானங்களுடன் வேங்கிட சுப்பையர் வெளிக்கிளம்பினுர்.

ஆபீஸிலிருந்து வழக்கத்திற்கு மாருக அன்று அவர் நாலுமணிக்கெல்லாம் வீடு வந்து சேர்ந்தார். சிற்றுண்டி எடுத்துக்கொண்ட பிறகு அவர் சிவராமனை அழைத்து, "உன் பெண் உஷாவை நான் பார்க்க வேண்டும். 'காரை' எடுத்துக்கொண்டு போய் அவளை அழைத்துவா" என்று சொன்னுர்.

சிவராமன் அத்திம்பேர் ஏதோ பரிகாசம் செய்வதாய் நினைத்து அவமானப்பட்டுக்கொண்டு அங்குமிங்கும் பார்த்தார். வேங்கிட சுப்பையர் சங்கரி வருணித்ததிலிருந்து தனக்கு அந்தப் பெண்ணை ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதாயும் வேறு ஒன்றும் விசேஷமில்லை என்றும் கூறி வற்புறுத்தினுர். அதன் பேரில் சிவராமன் அப்படியே சம்மதித்துக் "காரில்" புறப்பட்டார். ஆனல் அழகிரி உஷாவைத் தனியே அனுப்ப ஆக்ஷேபிப்பானே என்று ஐயமுற்ருர். "வேண்டுமானல் அவனும் கூட வரட்டுமே அல்லது பத்மாவையும் அனுப்பட்டுமே" என்று சமாதானம் செய்துகொண்டார்.

இருந்தாலும் அந்த சங்கத்தில் சிவராமன் ஏதாவது தடை ஏற்பட்டு உஷாவை அத்திம்பேரிடம் அழைத்து வரமுடியாமல் போய்விட்டால் அது தெய்வானுகூல்யம் என்று நினைத்தார்.

சிவராமன் அழகிரி ஜாகைக்குச் சென்றபோது வேறு ஒரு கார் வாசலில் நின்றுகொண்டிருந்தது. உள்ளே பல பேர்கள் பேச்சுக் கேட்டது.

சிவராமன் பொன்னுசாமி பிள்ளை முதலிய நடன கோஷ்டியை ஹாலில் பார்த்தார். அழகிரி சிவராமனை வரவேற்ருன். சிறிது நேரம் பொன்னுசாமி பிள்ளை, அழகிரி இவர்களுடன் லோகாபிராமமாய் பேசிக்கொண்டிருந்துவிட்டு சிவராமன் தான் வந்த காரியத்தைச் சொன்னுர். பொன்னுசாமிப்பிள்ளை உஷாவின் கலைத் திறமையை மெச்சிக்கொண்டார். மேலும் கொஞ்ச காலம் நல்ல சிக்ஷையிருந்தால் அவள் நிகரற்ற பரதகலாராணியாய் விளங்கக் கூடியவள் என்று கூறினுர். அழகிரி உஷாவை அனுப்புவதைப் பற்றி பதில் கூறவில்லை. ஆனல் பொன்னுசாமிப்பிள்ளை, "ஏன் ஐயர்வாள் பார்க்கவிரும்பினுல் குழந்தை போய் வரட்டுமே. நாம் ரயிலுக்குப் புறப்பட இன்னும் மூன்று மணி நேரமிருக்கிறதே" என்று ஆதரவுடன் மொழிந்தார். சிவராமன், "நான் அரைமணி நேரத்தில் அவளைக்கொண்டு வந்துவிட்டு விடுகிறேன்" என்று உறுதி கூறினுர். அழகிரி தான் கூடப் போக தைரியமடையவில்லை. ஏனெனில் அவன் மனதில் உறுத்திக்கொண்டிருந்த குற்றம் அப்போது ஒரு திகிலைப்பரப்பியது. பத்மாவைக்கூட அனுப்பவும் உசிதமில்லை என்று நினைத்தார், அனுப்ப முடியாதென்று மறுத்தாலும் உடனே மனஸ்தாபம் வருமென்றும், பெரிய மனுஷ்யனின் விரோதம் எப்படி முடியுமோ என்றும் அவனுக்குப் பயமிருந்தது.

புனுவில் பாரதி விழா

★

அமரகவி ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியாரின் திருவிழா சென்றமாதம் 18-ந்தேதி முதல் 4-தினங்கள் வரை புனுக்கலைக் கழகத்தாரால் சிறப்புறக் கொண்டாடப் பட்டது.

திருச்சி ஸ்ரீ நா. ஹாலாஸ்யம் மேற்படி நான்கு தினங்களிலும் சொற்பொழிவாற்றினுர். கவர்னர் ஜெனரல் ராஜாஜி, ரயில் போக்குவரத்துமந்திரிஸ்ரீ சந்தானம் முதலியோர் செய்திகள் அனுப்பியிருந்தனர். இவ்விழாவை யொட்டி பல போட்டிகள் நடந்தன. ரூ. 400 மதிப்புள்ள நூல்கள் வெற்றி பெற்ருேருக்குப் பரிசாக வழங்கப்பட்டன. சரஸ்வதி வித்யாலய மாணவிகள் பாரதியார் பாடல்களிலிருந்து சிலவற்றிற்கு காட்சிகளை அமைத்து நடித்துக் காட்டினர். கழக சித்திரக்காரர் வரைந்த பாரதியாரின் படம் திறக்கப்பட்டது. புனுவில் வசிக்கும் தமிழர் அனைவரும் இதில் தீவிர சிரத்தை எடுத்துக்கொண்டு விழாவை வெற்றிபெறச் செய்தனர்.

—

வரப்பெற்ருேம்

★

தென் திருவாங்கூர், கோட்டார், ஸ்ரீ பரஞ்சோதி கம்பெனியாரிடமிருந்து 6-கெஜத்திலுள்ள ஒரு புடவை வரப்பெற்ருேம். 'ஆர்ட் ஸில்க்'கில் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்புடவை, ஆகாச வர்ணத்தில், சிறு சிறு கோடிட்ட கட்டங்களுடன் கவர்ச்சியோடு விளங்குவதோடு வழவழப்பாகவும், உறுதியாகவுமிருக்கிறது. இதைப்போன்ற பல சேலைகளை இக்கம்பெனியார் உற்பத்தி செய்கிருர்கள். கைத்தறியில் உயர்தரமான சேலைகள், வேஷ்டிகள், முதலியவற்றையும் இந்தக் கம்பெனியார் தயாரிக்கின்றனர்.

பொன்னுசாமிபிள்ளை த்வரை செய்ததினுலும் அவன் பின்வாங்க முடியவில்லை. உஷாவைக் கூப்பிட்டு "குழந்தை! உன் தகப்பனுரோடு போய் உன் மாமனுரைப் பார்த்துவிட்டு உடனே திரும்பி வந்துவிடு. மாமா தாத்தா ஊருக்குப் போகிறபடியால் அவர் புறப்படு முன் அவசியம் வந்துவிடு" என்று வற்புறுத்திச்சொல்லி அவளுக்கு அனுமதி அளித்தார்.

உஷாவுக்குத் தன் தகப்பனுருடன் புறப்படும்போது இருந்த முகமலர்ச்சி அந்யாத்ருசமாகவிருந்தது. காரில் வந்துகொண்டிருக்கும்போது உஷா சிவராமனிடம் சொன்னதாவது; "நல்லவேளை! நீங்கள் வந்தீர்கள். என்னை ஊருக்குப் புறப்படும் அந்தத்தாத்தாவுடன் அனுப்பிவிட ஏற்பாடாயிருக்கிறது. அவர் ஒரு பரத நாட்டியப் பள்ளிக்கூடம் ஆரம்பித்திருக்கிருராம். அவருடைய பேத்தி கல்யாணி என்பவள் பரதநாட்டியப் பயிற்சி பெற்று வருகிருளாம். அவளுக்கு என்னை ஜோடி சேர்த்து இரண்டொரு வருஷம் தயார்செய்து வெளியில் கச்சேரிகளுக்கு அனுப்பிக்கொள்ளை சம்பாத்யம் சம்பாதிக்கலாம் என்று பிளான் போட்டுக்கொண்டிருக்கிருர்கள் இரண்டு தாத்தாக்களும். நீங்கள் இந்த நிமிஷம் வராவிட்டால் என்னை அப்புறம் கண்டுபிடிக்க முடியாது—"

சிவராமன் இந்த விருத்தாந்தத்தைக் கேட்டு பிரமித்துப் போனுர். "உஷா! நீ போக சம்மதித்தாயா?

"நான் சம்மதிக்கவாவது, மறுக்கவாவது? என்னை இதுவரை ஒருவராவது அது விஷயமாய் கேட்கவே இல்லை. எல்லா ஏற்பாடுகளும், பிரஸ்தாபங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. என் பெட்டி, படுக்கை சாமான்கள்கூட சித்தமாய் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன."

"இருக்கட்டும், அத்திம்பேர் என்ன சங்கல்பித்திருக்கிருரோ தெரியவில்லை. பொதுவாக உனக்கு நல்லகாலம் பிறக்குமென்றுதான் நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் நீ கவலைப்படாதே. உனக்கு ஆதரவு பெருகி வருகிறது—"

கார் பங்களாவை அடைந்தது

(தொடரும்.)

"பெலோ ரஷ்யா" என்ற ஸோவியத் கப்பல் ஸயாமிலிருந்து 7200-டன் அரிசியோடு இந்தியாவுக்குப் புறப்பட்டது. இதற்கு முன்னதாக இதே கப்பல் ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்குக் கோதுமை கொண்டுவந்தது. பாங்காக்கில் ஸயாமிலுள்ள இந்தியாவின் பிரதிநிதி பார்வையில் இக்கப்பலில் சரக்கேற்றப்பட்டது.

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

"நஞ்சன்கூடு பல்பொடி"

பாகடெரியின் சிறந்த மருந்துகள்

I.D.L.

குழந்தைகளுக்கு:
12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

குடும்ப அவசியங்கள்:
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விஷபேதிக்கும் (காலரா)
23 பெமினே (பெண்களின் பாம) தலைவலி, வாயுபிடிப்பு.....

தினசரி தேவைகள்:
61 நஞ்சன்கூடு பல்பொடி நீ 61. பல் உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம் } மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்
55 இஞ்சிப் அஜீரண, பித்த சமனி.

ஸோல் ஏஜெண்ட்கள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி, மதறாஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

வெறியாட்டல்

உத்தம குலத்தில் உதித்த நங்கையொருத்தி தன் மனதைப் பறிகொடுத்து, லட்சியம் நிறைவேறாததால் நைந்துருகிப் போகிருள். நாளுக்கு நாள் ஊனுருகி, உள்ளமும் சூம்பிப் போய்க்கொண்டு மெலிந்துவரும் தலைவிக்கு என்ன நோயென்பது செவிலிக்கு விளங்கவில்லை. காவல் மிகுந்ததனுல் வேறுபட்ட தலைவியின நிலை கண்டு, "இவ்வேறுபாடு எக்காரணத்தால் உண்டாகியது?" என்பது அவளுக்குப் புதிராயிற்று.

தலைவியின் உண்மையான நோய் எதுவென அறியமாட்டாத அவள், வேறுபாட்டின் காரணத்தை ஆராயும்பொருட்டு தெய்வங்களை அழைத்துப்பாடும் (அகவன் மகள்) கட்டுவிச்சியை (குறத்தி) அழைத்துக் கேட்டுப் பார்ப்பது வழக்கம். கட்டுவிச்சி முறத்தில் நெல்லைப் போட்டு, அதனை எண்ணி, அதனுற் போந்த சில நிமித்தங்களை அறிந்து, "இவள் முருகனுல் அணங்கப்பட்டாள்" என்று கூறுவாள். அது கேட்ட தாயர் வேலனையழைத்து வெறியாட்டெடுப்பாள்.

தோழி, வெறியாட்டலைத் தவிர்க்க எண்ணி செவிலிக்கு உண்மையைச் சொல்லுகிருள்.

"அடி அசடே! தலைவிக்கு வந்திருக்கும் வியாதி என்னவென்று எனக்கல்லவோ தெரியும்! அவளுக்குப் பால் கசப்பதற்கும், படுக்கை நோவதற்கும், கிள்ளை மொழியினைக் கேட்டால் காதில் குத்தல் எடுப்பதற்கும் உண்மைக் காரணம் எனக்குத்தான் நன்கு தெரியும். இதை விட்டுவிட்டு "பாலத்து சோசியன் கிரஹம் படுத்தும்" என்று சொன்னதைப்போல, நீ எதற்காக வீணில் வெறியாட்டலைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிருய்? அதெல்லாம் அவசியமில்லை. தலைவி தனிமையில் உட்கார்ந்துகொண்டு தோட்டத்தில் நிறைந்து விரிந்து வீழ்ந்திருக்கும் நீல மலர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு ஏங்குகிருள். அவளுடைய கண்களில் நீர் மல்குகிறது. இதற்கு உண்மையான காரணம் அவளுடைய தலைவன் நீல மலரைக் கொடுத்ததேயாகும். நீல மலரால், மலர்ந்த நட்பு அது. ஆகவே, அவளது துயரத்துக்குக்காரணம் நீல மலர் தந்து சென்றவர்தான்" என்று வெறியாட்டலைத் தவிர்க்க மார்க்கம் கூறுகிருள் தோழி. இக்கருத்தைத் தாங்கி வரும் குறுந்தொகைப் பாடலொன்று வருமாறு:—

பால் வரைந்தமைத்தல் அல்ல தவர் வயின்
சால் பளந்தறிதற்கு யாம் யாரோ
வெறியாள் கூறவும் அமையாள் அதன்தலைப்
பைங்கன் மாச்சுனைப் பல்பிணி அவிழ்ந்த
வள்ளிதழ் நீல நோக்கி உள் அகைபு
அழுத கண்ணள் ஆகிப்
பழுது அன்று அம்ம இவ்வாயிழை துணிவே.

—குறுந்தொகை.

ஆய் இழை-இந்த ஆராய்ந்த அணிகலன்களை அணிந்த தலைவி. வெறியாள் கூறவும் அமையாள்—வெறியாடும் மகள் இந்நோய் முருகனுலாயது என்று சொல்லவும் அமைதி பெருதவளாய். அதன் தலை—அதன் மேலும் (கூறுவாளாகி) பசுகண் மாசுனை பல்பிணி அவிழ்ந்த—பசிய இடத்தையுடைய கரிய சுனையினிடத்தே பல கட்டு அவிழ்ந்தவள். இதழ் நீலம் நோக்கி—அகன்ற இதழையுடைய நீல மலரைப் பார்த்து. உள் அகைபு—நெஞ்சுள்ளே வருந்தி. அழுத கண்களையுடையவளாகி, பால் வரைந்து அமைத்தல் அல்லது—பழவினையினலே வரையறுத்துப் பொருத்தப்பட்ட தன்றி. அவர் வயின்—அத்தலைவர் திறத்தில். சால்பு அளந்து அறிதற்கு—தகுதியை வரையறுத்து அறிவதற்கு, யாம் எத்தகுதியை உடையோம்.

(கருத்து) தலைவிக்கு நீலப் பூவைத் தந்து நட்புச் செய்த அன்பன் ஒருவன் உளன். நீலநோக்கி அழுதனள்—நீலப் பூவைத் தனக்குத் தந்த தலைவனை நினைந்து வருந்தியதைக் குறித்தது.

ப்ராங்கியல் - தகராறுகள் விடாத இருமல் &

சுவாச கஷ்டங்களுக்கு உமக்கு பெப்ஸ் அவசியம்

தொண்டை, சுவாசப்பை தகராறுகளை நிவர்த்திசெய்ய நல்ல ருசியுள்ள பெப்ஸ் சிறந்தது. பெப்ஸை மென்றவுடன் அதிலுள்ள மருந்தும் கிருமிநாச சத்துக்களும் சுவாசத்துடன் பாதிக்கப்பட்ட விடங்களுக்குச் செல்கின்றன. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டையை சமனமூட்டி கிருமிகளையும் கொன்று, சளியை தளரச் செய்து வீக்கத்தைக் குறைத்து கிருமிகளை நாசம் செய்யும்.

பெப்ஸ மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புகளும் போவதைக் குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, லி. டி., மதராஸ்.

PEPS

கிருமி நாச.

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி,

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

தலைநிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும் முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்திசெய்யுங்கள்.

அற்பகேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிட சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும், இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றேபெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ். | லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு கோவையில் சிறந்த இடம்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டின்கள் இன்னும் சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்

K. இராமச்சந்திரன்,

பாத்திர வியாபாரம்,

பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

டெலிபோன் : 2246. தந்தி : ஸ்லாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனர் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர் :

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர் காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, **MADRAS 5**

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும் அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை. அது கூந்தல் வேர்களுக்கு தேவையான இயற்கைபோஷாக்குகளை யூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பளபளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்.

எங்கும் கிடைக்கும். ஒரு புட்டி விலை அணா 15.

ஹிந்தி, ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

லலிதா பவர்:—மிகச் சிறந்த கூந்தல் டானிக். தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம் தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்குகளை தயாரிப்பது பற்றி பெருமையடைகிறேன்.

சாரதா ஜுன்னர்கார்:—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப் போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப்பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

கே. ஈச்வர்லால்:—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என் குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்.

சுஷில் குமார்:—நான்ரீடாகூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை யாவர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

ஜயந்த்:—நான் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் எனக் கண்டேன். ஸ்திரீகளின் கூந்தல் வளர்ச்சிக்கு மற்றும் ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்கச் சிறந்த டானிக்.

கண்ணாம்பா:—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

புஷ்பவல்லி:—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டேயிருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப்பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

சூர்ய குமாரி:—ரீடா நறுமணமுள்ளது. அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியையூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கிருஷ்ணவேணி:—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும், புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நிய நாடுகளிலிருந்துவரும் கூந்தல் டானிக்குகளை விட ரீடாசிறந்ததுஎன்பதே என் அபிப்ராயம்.

வசுந்தரா தேவி:—நான் ரீடாஉபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக்என் றுணர்ந்து கொண்டேன் [illegible].

ஆர். பத்மா:—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம். அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்குரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

ராஜம்மா:—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான மருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது என்றே கூறுவேன்.

லக்ஷ்மிபாய்:—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

வி. என். ஜானகி:—நான் வெகு நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன், அது கூந்தல்வளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

ஏ. ஆர். சகுந்தலா:— நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

ரீடா ஹேர் டானிக்

ஸுராஜ்மல்ஸ்
வைரங்கள்
313. நேதாஜி ரோட், சென்னை.